விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 30 திங்கட்கிழமை (13.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## 19-வது திருத்த சட்டத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு!

**இலங்கையில் மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களைக் குறைக்கும் என்று கருதப்படுகின்ற 19ஆவது சட்டத் திருத்தத்துக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.**

மாகாண சபைகளுக்கு குறைந்த அளவிலேனும் அதிகாரம் வழங்கும் 13 ஆவது சட்ட திருத்தத்துக்கு மாறாக, இந்தப் புதிய சட்டத் திருத்தம் கொண்டு வரப் படுகிறது என்று கூறப்படும் நிலையில், அதற்கு எதிர்ப்புகள் எழ ஆரம்பித்துள்ளன.

விரைவில் அறிமுகப் படுத்தப்படவுள்ள இந்த 19 ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாக குறைக்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு, அதிகாரப் பகிர்வு உட்பட பல விடயங்கள் 19 ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் தீர்க்கப்படும் என்று அரச தரப்பு கூறுகின்றது.

எனினும் 13 ஆவது சட்டத திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் புதிய சட்டத் திருத்தத்தின் மூலம் இல லாது செய்யப்படும் என்று அறியப்படுகிறது.

இத்தோடு மாகாண சபைகளின் அதிகாரங்களை கட்டுப்படுத்தும் அல்லது இல்லாது ஆக்கும் என்கிற காரணத்தாலேயே 19 ஆவது திருத்தத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்காது என்று அதன் பொதுச் செயலர் ஹஸன் அலி தெரிவித்தார்.

தமது கட்சி "13 ஆவது அரசியல் திருத்தத்தில் கை வைப்பதற்கு" எந்த வகையிலும் துணை போகாது எனவும் அவர் மேலும் கூறினார்.

தற்போது இருக்கின்ற 13 ஆவது சட்டத் திருத்தமே முழுமையான அதிகாரப் பரவலாக்கம் அல்ல என பதே தமது கட்சியின் நிலைபபாடாகும் எனவும் ஹஸன் அலி மேலும் தெவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஒருபோதும் இந்தியா ஆணையிடாது!

### அசோக் கே காந்தா தெரிவிப்பு



ஜெனிவாவில் அளிக்கப்பட்ட வாக்கை இலங்கைக்கு எதிரான வாக்காக கருதக் கூடாது என்று இலங்கையில் இருந்து வெளியேறும் இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"2009 இற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இந்தியா மகிழ்ச்சியடைகிறது.


இலங்கையின் நலன்களைக் காயப்படுத்தக்கூடிய எதையுமே இந்தியா செய்யாது.

ஜெனிவாவில் அளிக்கப் பட்ட வாக்கு இலங்கைக்கு எதிரானது அல்ல.

இலங்கையினதும் இந்தியாவினதும் அடிப்படையான நலன்களுக்கு இடையில் தொடர்பு உள்ளது. இந்த நலன்களின் எந்த முரண்

(20ஆம் பக்கம் பார்க்க)

## அசாத் சாலி கைதின் பின்னணியில் இந்தியா!



இந்தியாவுக்கு அசாத் சாலி மேற்கொண்ட விஜயம் தொடர்பிலான தகவல்களை இந்திய புலனாய்வு அமைப்புக்களே இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அசாத் சாலி சென்னைக்கு மேற்கொண்ட விஜயம், அவர் யார் யாரைச் சந்தித்தார் போன்ற விபரங்களை இந்திய புலனாய்வு அமைப்புகள் இலங்கையின் படைத் துறை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளன.

பாகிஸ்தானின் புலனாய்வுப் பிரிவு இலங்கையிலுள்ள தமிழ் பேசும் முஸ்லிம்களை தென்னிந்தியாவுக்குள் ஊடுருவ வைக்க முயற்சிகளை மேற்கொள்வதாக இந்திய புலனாய்வு அமைப்புகள் கொண்டிருந்த சந்தேகத்தின் அடிப்படையிலேயே இத் தகவல்கள் இலங்கையின் படைத்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே அசாத் சாலி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இலங்கையின் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப் பட்டதாக குறிப்பிட்ட ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

ஆனால் தான் வழங்கிய செவ்வி பிழையாக பிரசுரிக் கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அசாத

(19ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ள யுத்த வெற்றி நிகழ்விற்காக படையினர் ஒத்திகை நிகழ்வில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலிமுகத்திடலில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

## பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவனொருவன் சடலமாக மீட்கப் பட்டுள்ளான். இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்.அரியாலை மாம்பழச் சந்திக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில இடம்பெற்றுள்ளது.

பா.ரசாந் (வயது-20) என்ற (19ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிகளுடன் வாகனம் மீட்பு

உள்நாட்டில் தயாரிக்கப் பட்ட இரண்டு துப்பாக்கிகளுடன் இருந்த கப் ஒன்றை பண்டாரவளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பண்டாரவளை-பூணாகலை தேயிலை தேட்டத்திற்கு அருகில் இருந்து இந்த கெப் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு

(19ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் விடுதலையை தடுக்கிறார் கருணாநிதி

### குற்றம் சாட்டுகிறார் மற்றொரு கைதி

(சென்னை)

கருணாநிதி வாய்திறந்தால் முதல்வர் ஜெயலலிதா எதிர்மறையாகத்தான் செய்வார். அதன் அடிப்படையிலேயே ராஜீவ் காந்தி கொலைவழக்கின் குற்றவாளிகளான சாந்தன், முருகன், பேரறிவாள்ன் ஆகியோரின் விடுதலை தொடர்பில் கருணாநிதி வாய்திறககிறார் என தற்காலிக விடுதலையில் வெளியே வந்த கைதி ஒருவர் தெரிவித்துள்ளார்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோர் அரசின் கருணையை எதிர்பார்த்துக் காத்திருப்பதைப்போல அதே வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றவர்களும் பெரும் எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள.

ராபர்ட் பயாஸ் ,ஜெயக்குமார் ஆகியோர் புழல் சிறையிலும் வேலூர்பெண்கள் சிறையில் நளினியும் மதுரை மத்தியச் சிறையில் ரவிச்சந்திரனும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.



கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நீதிமன்றத்தில் உத்தரவுபெற்று 15 நாள் பரோலில் வெளியே வந்தார் ரவிச்சந்திரன். இப்போது மீண்டும் பரோல் கேட்டு உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

வழக்கறிஞர் மூலம் ரவிச்சந்திரன் இந்திய ஊடகம் விகடன் கேட்ட (19ஆம் பக்கம் பார்க்க)

## திராய்மடு கிராமத்தில் ஆயுதங்கள் மீட்பு

மட்டு.திராய்மடு சுவிஸ் கிராமம் எப்.வலய காட்டுப் பகுதியில் வெட்டிய பனை மரத்தின் நடுவில் பாதுகாப்பான கறுப்பு பொலித்தீன் மற்றும் முள்ளு கம்பிகளினால், சுற்றி வைக்கப்பட்ட நிலையில இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் தயாரிப்பிலான புதிய இரண்டு கை குண்டுகளும், ரீ56 ரக 60 தோட்டாவும், 2 மெகசினும் கைப்பற்றப் பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகரும், புலானய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியுமான என்.எம். றஹீம் தெரிவித்தார்.

சுவிஸ் கிராமம் எப். வலய காட்டுப் பகுதியில் விறகு வெட்டும் ஒருவர் மட்டக் களப்பு பொலிஸ் புலனாய்வு

(19ஆம் பக்கம் பார்க்க)

## சவுதியில் தங்கியிருந்த இலங்கையருக்கு மன்னிப்பு

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்கள் அந்த நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு பொது மன்னிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளதாக சவூதியிலுள்ள இலங்கைத்தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார.

சவூதி அரேபிய தொழில் அமைச்சின் வெளிநாட்டு அதிகாரியொருவருடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய ஏப்ரல் மாதம


(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மரண அறிவித்தல்கள்

## மு.வ. சுப்பிரமணியம் மகாதேவா



கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு சுப்பிரமணியம் கடந்த 11.05.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பவளம் தம்பதியினரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பாக்கியம் தம்பதியினரின் மருமனும் இராஜேஸ்வரியின் கணவரும் ஆவார் நிஷானந்தினி (ஜேர்மனி) பார்த்தீபன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறேமகுமார் (ஜேர்மனி) சீத்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இரத்தினசபாபதி (பிரான்ஸ்) பாக்கியநாதன் (ஜேர்மனி) பரமேஸ்வரி ஞானேஸ்வரி (பிரான்ஸ்) கமலேஸ்வரி, அசோக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ப்ரமேஸ்வரி, நாகேஸ்வரி, சொர்ணலக்கமி, புஸ்பரத்தினம், யோகேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் அதீனா (ஜேர்மனி) அதீனன் (ஜேர்மனி) அக்ஷாயினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் நாளை 14.05.2013 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடன் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
தே.ஜெயகுமார்
(மருமகன்)

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(2609)

## திருமதி செல்லம்மா பொன்னையா



அராலி மேற்கைப்பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா பொன்னையா நேற்று (12.05.2013 ஞாயிற்றுக் கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் பிள்ளையம்மாவின் அன்பு மகளும் நாகராஜா (ஜேர்மனி) புண்ணிய மூர்த்தி (கனடா), விஜயலட்சுமி, பாலசிங்கம் (பபா -திருநெல்வேலி சந்தை) ஆகியோரின் அன்புத்தாயாரும் சரசாதேவி (கனடா), தர்மலிங்கம், செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கண்மணி, விசாலாட்சி, சிவபாக்கியம், நாகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் சஜீவனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2013) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

162, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

(2608)


# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

14.05.2013 முதல் 19.05.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

# NALIN IT

195/2,Palaly road, Parameswara Junction,Palaly Road,Jaffna.

மிக மிக குறைந்த விலைகளில்
- LAPTOPS
- BRANDED/ASSAMBLED PC
- PRINTERS & TONERS
- COMPUTER ACCESSORIES
- CCTV CAMERA SYSTEM
- REPAIRING & SERVICE

LAPTOP களின் புதிய வரவுகள் எம்மிடம்
ஏராளமான உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற தெரிவுகள்
wih laptops HUAWEI 7.2 Dongle Free

facebook.com/nalin it

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT).LTD
TP:0212221121/1166 | HOTLINE-0777667975

# கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா (Prima), கிறீன் வலி (Green Vally) & சந்தலங்கா (Sandalanka) 'A' தரமான புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். தொகையான கொள்வனவாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். முன் பதிவு செய்யவும்.



1.நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 2226944
2.சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை.
தொ.பே. இல. 077 8996085

(2597)


# மரண அறிவித்தல்

## வேலன் கந்தன்



மத்தொனி, கரவெட்டி மேற்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கந்தன் அவர்கள் நேற்று (12.05.2013) ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணியளவில் காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும், அன்னபாக்கியம் சிவபாலன் (லொறி உரிமையாளர்) பரந்சோதி (கொழும்பு) கமலநாதன் (அபிராமி ஸ்ரோர்ஸ் - நெல்லியடி), கமலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.05.2013 இன்று திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 2.00 மணிக்கு சோனப்பு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத் தகவலை அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்பு : 072 7495930
075 0387023

(3323)

## விபத்தில் சிக்கி ஊடக வியலாளர் பலி

கொழும்பு,கொள்ளுப்பிட்டி கடற்கரைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரண் எப்.எம் இன் நிகழ்ச்சித் தயாரிப்பாளரான அனுஷ்க இந்திரஜித் பெர்னாண்டோ (வயது 27) என்பவரே நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு இடம் பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இவரது மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டி யொன்றும் மோதியே இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். முச்சக்கரவண்டியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (எ-8)

## அம்மா பாடல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அம்மா பாடல் காணொளி இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கோண்டாவில் பலாவி வீதியில் அமைந்துள்ள இராஜேஸ்வரிமணிமண்டபத்தில் நடைபெற்றவுள்ளது.

யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு முன்னாள் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் பிரதம வருந்திரனாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இக்காணொளி அன்னை தின சிறப்பு வெளியீடாக வெளியிடப்படவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (செ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நாற்காலி ஆசைகள்

இந்தக் காலத்திலே நாற்காலிக்கு ஆசைப்படாதவர்கள் மிகவும் அபூர்வம்.

அமர்ந்து கொள்ள ஒரு நாற்காலி கிடைக்காதா... அதனுடைய ஒரு கால் உடைந்து முக்காலியாக இருந்தால்கூட பரவாயில்லை. ஒருவாறு "அட்ஜஸ்ட்" செய்து அமர்ந்திருக்கலாம் என்று அலைபவர்கள் எத்தனை பேர் உள்ளனர்.

இந்தக் காலத்தில் மட்டும்தான் இப்படி என்று நினைக்கக்கூடாது. கடந்த காலங்களிலும்தான் இப்படி இருந்திருக்கிறது.

பரமசிவன் வசிட்டருக்கு ஒரு விசேடமான ஆசனத்தைக் கொடுத்துள்ளார். அந்த ஆசனத்தின் விசேடம் என்னவென்றால், வசிட்டர் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போக வேண்டுமென நினைத்து புறப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் செல்வதற்கு முன்பே ஆசனம் சென்று விடும். அவ்வாசனம் ஒரு வசதியான இடமாகப் பார்த்து இருந்து விடும்.

வசிட்டர் போவார்... அங்கே அமர்வதற்கு இவருக்கு இடப் பிரச்சினை ஏற்படாது.

அதுதான் இவருடைய ஆசனம் முன்னரே அங்கே போய் இவருக்காகக் காத்துக் கொண்டிருக்கே... அதன்பின் என்ன கவலை? நேராகச் சென்று அங்கே போய் அமர்ந்து கொள்வார்.

இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மற்றைய முனிவர்களுக்கு பொறாமையாக இருந்தது. எல்லோரும் ஒரு இடத்திலே கூடி "என்ன இது? நாமும் அவரை மாதிரித்தானே! இருந்தாலும் நமக்கு அது மாதிரி ஒரு ஆசனம் கிடைக்கவில்லையே!" என்று யோசித்தார்கள்.

சரி... நேராகப் பரமசிவனிடம் போவோம். அங்கே பிரச்சினையைக் கூறி தீர்ப்போம் என்று நினைத்து அவரிடம் சென்றனர்.

அங்கே போய்; "ஐயா! நாங்களும் முனிவர்கள் தானே! வசிட்டர் மாதிரி நாங்களும் கடும் தவம் புரிகிறோம். அப்படியிருக்கும் போது அவருக்கு மட்டும் ஏன் இந்த விசேட சலுகை?" என்று கேட்டார்கள்.

அதற்கு பரமசிவன்; முனிவர்களே! உங்கள் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன்னர் நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார்.

"என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்" என்றார்கள்.

"நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சென்று உங்களைவிட உயர்ந்த ஒருவரைத் தேடிக் கண்டுபிடித்து, அவருக்கு அதிதி பூஜை செய்து ஒரு மண்டலத்தினுள்ளே என்னிடம் அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்று கூறி அனுப்பினார்.

"சரி"யென்று இவர்கள் அனைவரும் புறப்பட்டு போய் விட்டார்கள்.

நாட்கள் கடந்த நிலையில்; முனிவர்கள் அனைவரும் திரும்பி பரமசிவன் முன்னால் வந்து நின்றார்கள்.

"ஐயா! எவ்வளவோ தேடிப் பார்த்தோம். எங்களைவிட உயர்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை" என்றார்.

வசிட்டரும் வந்து சேர்ந்தார். அவர் சொன்னார்; என்னை விட தாழ்ந்தவர் யாருமே கிடைக்கவில்லையே" என்றார்.

இதைக் கேட்டவுடன் மற்றைய முனிவர்களுக்கு வெட்கமாகி விட்டது. இவ்வுலகில் எம்மைவிட மேலானவர்கள் யாருமே இல்லையென்று நாம் நினைக்கிறோம். வசிட்டரோ தன்னைவிட தாழ்வானவர்கள் யாருமே இல்லையென்று நினைக்கிறார்.

பரமசிவன் ஏன் அந்த ஆசனத்தை அவருக்கு மட்டும் கொடுத்தார்? என்ற கேள்விக்கான பதில் அவர்களுக்கு கிடைத்து விட்டது.

இந்தக் காலத்திலே நாம் எப்படி நினைக்கிறோம் என்றால், எல்லோரும் நம்மைவிட மட்டமானவர்கள். அதனாலே நாம் மட்டும் நாற்காலியிலே அமர்ந்தால் போதும் என்று நினைக்கிறோம்.

ஏமாந்து போனவர்கள் சந்தர்ப்பம் பார்த்து காலைவாரி விடுகிறார்கள். கீழே விழுந்து காலை உடைத்துக் கொள்கிறோம். அதுதான் இன்று நடைபெறுகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இலவச குடிநீர் விநியோக திட்டம் பொலிஸாரால் ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொது மக்களின் நலன்கருதி யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் இலவச குடிநீர் விநியோகத்திட்டம் பொலிஸாரினால் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கே.கே.எஸ்.பொலிஸ் அத்தியட்சகர் மகிந்த ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருவதனால் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கொழும்பிலுள்ள தலைமை பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸ் வரவழைக்கப்பட்டு வீதி ஒழுங்குகள் தொடர்பான ஒளிப்படக் காட்சிகள் பிரதேச ரீதியாக திரையிடப்படவுள்ளன எனவும் அத்தியட்சகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்திலுள்ள பொது மக்களின் நலன்கருதி பொலிஸார் பல பொது நலத் திட்டங்களையும் பொது வேலைத்திட்டங்களையும் செய்து வருகின்றனர்.

குறிப்பாக மருத்துவ முகாம், சிவில் சமூக ஒன்றுகூடல்கள், சிரமதானம் எனப் பல வேலைத்திட்டங்களை இங்குள்ள பொதுமக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் குடிநீர் மாசடைதல் எனும் சுற்றுச்சூழல் பிரச்சினையும் தலை தூக்கியுள்ளது. மாசடைந்த குடிநீரைப் பருகுவதால் பொதுமக்கள் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். இதனை ஓரளவு கட்டுப்படுத்தும் முகமாக பொலிஸாராகிய நாம் பொது மக்களுக்கென இலவச குடிநீர் திட்ட நீர்த்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

முதல் தடவையாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, இளவாலை ஆகிய பிரதேசங்களில் இக் குடிநீர்த்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் இப் பொலிஸாரின் நன்னீர் வழங்கும் திட்டம் மேற் கொள்ளப்படவுள்ளது.

குடிநீரின் சிக்கனத்தைக் கருத்தில் கொண்டு நபரொருவருக்கு 2 லீற்றர் வீதம் குடிநீரே முதல் தடவையாக வழங்கப்படும்.

இங்கு நடைபெறும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு செயன்முறை ரீதியான விளக்கங்களும் பொது மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. வீதிப்போக்குவரத்துக்களின் பொது மக்களின் சிறு தவறுகளே பாரிய விபத்துக்களை ஏற்படுத்தி உயிர்களினையும் காவு கொண்டு விடுகின்றன.

வீதி போக்குவரத்து சட்ட விதிமுறைகள் தெரிந்தும் அசண்டையீனம் காரணமாக அவற்றினை பின் பற்றாமல் விபத்துக்களில் சிக்கி படுகாயமடைந்து, அவயவங்களை இழந்து துன்பப்படுகின்றனர்.

இவ்வாறான தெரிந்தும் தெரியாமலும் விடப்படும் தவறுகளை பொது மக்களுக்கு சுட்டிக்காட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாகவே இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது என்றார் அவர். (அ-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலின் வைகாசி மஹோற்சவ பெருவிழா இன்று திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெற்று எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. மேலும் வெளிநாடுகளில் வாழும் பத்தர்களுக்காக திருவிழா நிகழ்வுகள் தினமும் டான் ரிவி, ஓம் ரிவி ஆகிய அலைவரிசைகளில் ஒலிபரப்படும். (அ-2-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 100 |
| தக்காளி | 100 | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 50 | 50 | 60 |
| கோவா | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 90 | 120 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 | 60 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 20 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 170 | 180 | 120-160 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 60 | 70-80 | 90 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 80 | -- | -- |
| பயற்றங்காய் | 70 | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 60 | 50-70 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 350-400 | 600 | 400 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20-30 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 100 |

# இராசி பலன்

**13.05.2013**

**(சித்திரை 30, சனிக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு**

**திருதியை முற்பகல் 11.35 மணி வரை**

**மிருகசீரிடம் பிற்பகல் 3.44 மணிவரை**

**இராகுகாலம் 7.24 - 8.54 மணிவரை**

**சுபநேரம் 11.54 - 1.24 மணிவரை**

**சதுர்த்தி விரதம்**

**மேடம்** சகோதரர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு. எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள். போசன சுகமுண்டு. குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறும்.

**இடபம்** கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும். தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும். சுப காரியப் பேச்சுக்கள் முடிபாகலாம்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம். பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள். சிந்தனை மிகுதியுண்டு.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள். மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சில சமயம் உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகும்.

**சிங்கம்** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள். வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும். பொருளாதார நிலை உயரும். போசன சுகமுண்டு.

**கன்னி** புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தூர தேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும். ஆரோக்கியமான நாள். புதிய திட்டங்கள் கைகூடும்.

**துலாம்** தந்தை வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம். தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள். சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** வழிபாட்டல் ஆனந்தம் காண வேண்டிய நாள். கடன் சுமை கூடும். ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். பயணங்களின்போது விழிப்புணர்ச்சி தேவை.

**தனுசு** குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் நாள். இளமைக்கால நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள். குதூகலம் தரும் பயணம் ஒன்று உருவாகும்.


**மகரம்** ஆரோக்கியமான நாள். செய்தொழில் மேன்மையுண்டு. காரிய அனுகூலமுண்டு. சேமிப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பீர்கள். பிரியமான சிலரின் சந்திப்புண்டு.

**கும்பம்** வியாபார விருத்தியுண்டு. புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கும்.

**மீனம்** பொன்னான நாள்.புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம். பயணங்களால் பலனுண்டு. விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை காப்புறுதி சம்மேளனத்தின் 2013ஆம் ஆண்டுக்கான அலுவலக நிர்வாகிகள் தெரிவு அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற 24ஆவது பொதுக் கூட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இலங்கை காப்புறுதி சம்மேளனத்தின் தலைவராக ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் ஷாப்டரும், யூனியன் அசூரன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேர்க் பெரேரா பதில் தலைவராகவும், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மொஹான் டி அல்விஸ் மற்றும் ஓரியன்ட் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தீப்தி லொகுஆராய்ச்சி செயலாளராகவும், தவிசாளராகவும் நியமிக் கப்பட்டுள்ளனர். இவர்களுடன் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

# முதலாவது காலாண்டில் நாட்டின் மொத்த ஏற்றுமதி 8.1 வீதத்தால் சரிவு

ஆண்டின் முதலாவது காலாண்டில் நாட்டின் மொத்த ஏற்றுமதி 8.1 வீதத்தால் சரிவடைந்துள்ளதாகவும் 2.57 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2.36 மில்லியன் அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த ஏற்றுமதியில் சுமார் 75% பங்கினை வகிக்கும் தொழிற்துறை சார் ஏற்றுமதிகள் பெருமளவு வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் மார்ச் மாதத்தில் மாத்திரம் ஏற்றுமதி வீழச்சி 2.8 வீதமாக பதிவாகியிருந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் ஆடைத்தொழில் துறையுடன் தொடர்புடைய உற்பத்திகள் முதல் காலாண்டில் 8.7 வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளன. அமெரிக்காவுக்கான ஆடை உற்பத்திகள் கடந்த பெப்ரவரி மாதத்தில் அதிகரிப்பை காண்பித்திருந்தன.

விவசாயத்துறை சார்ந்த உற்பத்திகளும் முதல் காலாண்டில் 4.2 வீத வீழ்ச்சியை பதிவு செய்திருந்தன. 2012 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 575 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட விவசாயத்துறை சார்ந்த உற்பத்திகள் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 551 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தன .

தாதுப்பொருட்களின் ஏற்றுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா–இலங்கை வர்த்தகம் 55 ஆயிரம் கோடியை எட்டும்!

இந்தியா-இலங்கை இடையிலான வர்த்தகம் 2016ஆம் ஆண்டில் ரூ.55 ஆயிரம் கோடியை எட்டும் என்று இலங்கை துணைத் தூதர் பிரசாத் காரியவாசம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் தொடர்பாக மேலும் கூறியதாவது,

2016 -ஆம் ஆண்டில் இந்தியாவுடன் வர்த்தக மதிப்பை இப்போது இருப்பதைவிட இரு மடங்காகக் வேண்டும் எண்டதேளங்கள் இலட்சியம்.

இதற்கு ஏற்ற வகையில் இரு நாடுகளிடையே பல்வேறு தடையற்ற வாணிப ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்திய தரப்பில் வரியல்லாத பிற வகை தடைகள் உள்ளன. இலங்கை தரப்பில் வரி சார்ந்த சில தடைகள் உள்ளன.

வாகனம் -இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள்- வேளாண் பொருள்கள் -காகிதம் உள்ளிட்டவை இந்தியாவிலிருந்து அதிகம் இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஜவுளி–வாசனைப் பொருள்கள் அதிக அளவில் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகின்றன. இவை தவிர இலங்கையில் உள்கட்டமைப்பு- சுற்றுலா சேவைத் துறைகளில் முதலீடு செய்ய இந்திய முதலீட்டாளர்களுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என்றார்.

# முதல் காலாண்டில் டயலொக் லாபம்

இலங்கையின் முன்னணி கையடக்க தொலைபேசி வழங்குநரான டயலொக் அக்ஸியாட்டா 2013 -ம் நிதி வருடத்தின் முதல் காலாண்டில் 1.59 பில்லியன் ரூபாயை தேறிய இலாபமாகப் பெற்றுள்ளது.

2012 ஆம் ஆண்டில் முதல் காலாண்டில் 531 மில்லியன் நட்டத்தை டயலொக் பெற்றிருந்தது.

இந்த தரவுகள் கொழும்பு பங்குச் சந்தைக்கு வழங்கப்பட்ட இடைக்கால நிதி கணக்கறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் அக்ஸியாட்டா குழுமத்தின் ஓர் அலகான டயலொக் 2013 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 15.2 பில்லியன் ரூபாயாக அதிகரித்த வருவாயை பெற்றுக் கொண்டது. 2012 ஆம் ஆண்டின் முதல் காலண்டில் 12.8 பில்லியன் வருவாயை மட்டுமே டயலொக் பெற்றுக் கொண்டது.

# சம்சுங் கலக்சி S4 இலங்கையில் அறிமுகம்

சம்சுங் எலக்ரோனிக்ஸ் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டதும் அனைவரையும் ஒன்றிணைப்பதுடன், நாளாந்த வாழ்க்கையை மேலும் வளப்படுத்தி, சுவாரஸ்யப்படுத்துவதுமான தமது அடுத்த தலைமுறை சம்சுங் கலக்சிஎஸ்4 இனை இலங்கை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது என சம்சுங் நிறுவன தலைமை அதிகாரியும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜே.கே.ஷின் குறிப்பிட்டார்.

சம்சுங்கிலுள்ள நாம், வாடிக்கையாளர்கள் குறித்தும், புத்தமைவுகள் குறித்தும் மிகுந்த கவனம் மற்றும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறோம்.

வாடிக்கையாளர்களிடமிருந்து தொடர்ச்சியாக அவர்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் ஆகியவற்றை வரவேற்று அது குறித்து கவனம் செலுத்தும் நாம், அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான கண்டுபிடிப்புக்களை மேற்கொள்கிறோம் என்றார்.




# செலான் வங்கிக்கு 1ஆம் காலாண்டின் வரிக்கு பின்பான லாபம் 26% வளர்ச்சி

மார்ச் மாதத்தில் 25ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய செலான் வங்கியானது, 2013 மார்ச் 31ஆம் திகதியன்று முடிவடைந்த 3 மாத காலப்பகுதியில் வருமான வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 728 மில்லியனை பெற்றுக் கொண்டதன் மூலம் மற்றுமொரு தடவை மனதில் பதியத்தக்க காலாண்டு நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளது.

வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 505 மில்லியன் என்ற மட்டத்தை அடைந்துள்ளது. 2012ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 399 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 26.7%அதிகரிப்பாகும். LKAS / SLFRS விதிமுறைகளுக்கு அமைவாக இடைக்கால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் குறைவான கடன் கேள்வி மற்றும் இத்துறையில் பரவலாக நிலவிய வட்டிவீத எல்லைகள் மீதான அழுத்தம் போன்றவற்றுக்கு மத்தியிலும், 2013 மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த 3 மாத காலப்பகுதியில் தேறிய வட்டி வருமானமானது ரூபா 2.16 பில்லியனாக 5.8% ஆக அதிகரித்துள்ளது.

செலான் வங்கியின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஹால் ஜயமன்ன கூறுகையில், நாம் வகுத்த உபாய திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட பலாபலன்களை தொடர்ந்தும் பெற்றுத் தந்தவண்ணம் இருப்பதை இப் பெறுபேறுகள் உறுதி செய்கின்றன" என்றார்.

2013 மார்ச் 31ஆம் திகதியன்று இருந்தபடி செலான் வங்கியின் சேவை வலைப்பின்னல் 147 கிளைகளையும் 154 ATM மையங்களையும் 81 மாணவர் சேமிப்பு நிலையங்களையும் கொண்டியங்குகின்றது.

# சரக்கு கையாள்கையில் ஸ்ரீலங்கன் உயர் அடைவு

ஸ்ரீலங்கன் விமான சேவையின் அங்கமான -ஸ்ரீலங்கன் சரக்கு கையாள்கைபிரிவின் மூலம் இதுவரை காலத்தில் பதிவு செய்யப்பட்ட அதியுயர் வருமானமான 12.8 பில்லியன் ரூபா 2012/13 நிதியாண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன் இதே காலப் பகுதியில் குறித்த நிறுவனத்தின் மூலம் கையாளப்பட்ட அதியுயர் சரக்கு அளவு இதுவெனவும் நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்மூலம் கடந்த நிதியாண்டில் ஸ்ரீலங்கன் சரக்கு கையாள்கை பிரிவு 21% வருமான அதிகரிப்பையும் 15 வீத சரக்கு கையாளல் அளவு அதிகரிப்பையும் பதிவு செய்துள்ளது.

# வேலையை இழந்து விடுவோமோ என அஞ்சும் பிரிட்டிஷ் பணியாளர்கள்!

கடந்த 2008ஆம் ஆண்டில் உலகெங்கும் ஏற்பட்ட பொருளாதார சரிவு இன்னும் முற்றிலும் சரியாகாத நிலையில், இங்கிலாந்து நாட்டிலும் அதன் பாதிப்புகள் இருக்கவே செய்கின்றன.

கனடா லைப் குரூப் இன்சுரன்ஸ் நிறுவனம், பெரும்பான்மையான இங்கிலாந்து மக்களை வடிக்கையாளர்களாகக் கொண்ட ஒரு காப்புறுதி நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம் சமீபத்தில் எடுத்த ஆய்வின்படி, பெரும்பான்மையான இங்கிலாந்து மக்கள் சளி, ஜ/ரம் போன்ற சிறுசிறு பிரச்சினைகளுக்கு விடுப்பு எடுப்பதைத் தவிர்க்கின்றார்கள் என்பது தெரியவந்துள்ளது. விடுப்பின்போது சேர்ந்துவிடும் அதிகப்படியான பணிச்சுமை ஒருபுறம் என்றால், தம்முடன் வேலை செய்யும் சக ஊழியர்கள் தங்களைப் பற்றி தவறாக நினைக்கக் கூடும் என்ற எண்ணமும் இவர்களை விடுப்பு எடுப்பதிலிருந்து தடுக்கின்றது.

மூன்றில் ஒரு பங்கு ஊழியர்கள ஜ/ரம் இருந்த போதிலும், வேலைப் பளுவைக் குறைப்பதற்காக பணிக்குச் செல்லலாம் என்றும், 93 சதவிகிதம் பேர் விடுப்பு எடுப்பதற்கு சளி ஒரு பெரிய காரணமல்ல என்றும் தெரிவித்துள்ளார்கள்.

ஆண்கள் சராசரியாக 3.5 நாடகளும், பெண்கள் 4.4 நாட்களும் விடுப்பு எடுக்கின்றனர். ஒருநாள் விடுப்பு எடுப்பது குறித்து கூட யோசிக்க வேண்டியுள்ளது என்று பணிபுரிபவர்கள் கூறுவது கவலை அளிக்கக்கூடிய விஷயமாக உள்ளது என்று பால் அவிஸ் என்ற காப்புறுதி அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார்.

விடுப்பு எடுப்பதால் வேலைப் பணி கூடும் என்பதைத்தவிர, தங்களின் வேலைவாய்ப்பு பறிபோகும் என்ற எண்ணமே விடுப்பு எடுக்காததின் முக்கிய காரணமாக அவர்களால் குறிப்பிடப்படுகின்றது. இதனால தான், 2007ஆம் ஆண்டில் ஐந்து சதவிகிதமாக இருந்த வேலையில்லாத் திண்டாட்டம், தற்போது எட்டு சதவிகிதம் என்ற அளவிலேயே இருக்கின்றது என்று கனடா லைப் காப்புறுதி நிறுவனம் தெரிவிக்கின்றது.

# பங்கு சந்தை நடவடிக்கைகள் அதிகரிப்புடன் நிறைவு

கொழும்பு பங்கு சந்தை நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக் கிழமை நிறைவடையும் பொழுது தொடர்ச்சியான ஏழு தினங்கள் அதிகரித்த நிலையில் நிறைவடைந்திருந்தன.

முன்னைய வாரத்துடன் ஒப்பிடுகையில் கடந்த வாரம் இடம் பெற்ற மொத்த கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்து காணப்பட்டதுடன் மொத்த பங்கு புரள்வு பெறுமதி மூன்று மடங்காலும் அதிகரித்து காணப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கை நிறைவடையும் பொழுது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6250 ஆகவும் எஸ் அன்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டி 3530.90 ஆகவும் அமைந்திருந்தன.

மே 06 ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 10597177691 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 74801 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 72134 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 2667 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் லங்கா செரமிக், சிலோ ஃபினான்ஸ், கெல் ஃபினான்ஸ், மொரிசன்ஸ் மற்றும் பிம்புத் ஃபினான்ஸ் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாப மீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

செலின்சிங், மேர்க் சிப்பிங், சிலோன் லெதர் (வாக்குரிமை), ஹபுகஸ்தென்ன மற்றும் மிரமர் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 124.54 | 127.59 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 191.83 | 197.43 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.59 | 166.98 |
| சுவிஸ் பிராங் | 130.22 | 135.23 |
| கனேடிய டொலர் | 122.84 | 127.32 |
| அவுஸ்திரேலிய டொலர் | 124.78 | 129.57 |
| சிங்கப்பூர் டொலர் | 100.28 | 103.78 |
| ஜப்பான் யென் | 1.22 | 1.27 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.32 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.30 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை கண்காணிக்குமாறு கோரிக்கை விடுக்கப்படவில்லை

## ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்

வடமாகாண சபைத் தேர்தலின் போது தமது கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படுவது குறித்து தமக்கு இதுவரை எதையும் இலங்கை அரசாங்கம் விடுக்கவில்லை என ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் பேனாட் செவேஜ் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்பாளர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் அதற்கு உரிய பதில் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணசபை தேர்தல் எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறும் என்று ஜனாதிபதி அறிவித்துள் ளார். எனினும் தேர்தல்கள் திணைக்களம் இன்னும் அதனை உறுதிப்படுத்தவில்லை.

இந்நிலையில் குறித்த தேர்தலின் போது ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பாளர்கள் தேவை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சாரதியின் தறிகெட்ட ஓட்டத்தால் 15 மாநகர சபை பணியாளர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த உழவு இயந்திரம் தடம்புரண்டதில் 15 பேர் காயமடைந்துள்ளனர். இவ் விபத்து நேற்று முற்பகல் 6 மணியளவில் நல்லூர் கந்தன் ஆலய பின்புற வீதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான குப்பை அகற்றும் உழவு இயந்திரம் யாழ். மாநகர சபையிலிருந்து நல்லூர் கந்தன் ஆலய இராஜகோபுரம் அமைந்துள்ள வீதி வழியாக வந்த போது, வாகனச் சாரதி மிக வேகமாக பின் வீதிக்கு உழவு இயந்திரத்தை திருப்பியுள்ளார்.

அதிகரித்த வேகம் காரணமாக உழவு இயந்திரத்தின் பின்புற பெட்டி இயந்திரத்தை விட்டு விலகி வீதியில் புரண்ட தோடு இயந்திரம் சாரதி இல்லாமல் சிறிது தூரம் தனித்து ஓடி நின்றுள்ளது.

இதன்போது உழவு இயந்திரத்தின் பின் பெட்டியில் இருந்த அனைத்து மாநகரசபை பணியாளர்களும் காயமடைந்தனர்.

ஒரு சிலர் படுகாயங்களுக்கும் உள்ளாகினர். காயமடைந்த அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இவ் விபத்திற்கு காரணம் உழவு இயந்திர சாரதியின் தறிகெட்ட ஓட்டமே என விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-4)

# பாகிஸ்தான் மாபீயா கும்பல் இலங்கையில் இயங்கி வருகின்றது

பாகிஸ்தான் மாபீயா கும்பலொன்று இலங்கையில் இயங்கிவருவதாக அரச புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் கடும்போக்குவாதம் மற்றும் முஸ்லிம் பாதாள உலகக் குழுக்களுடன் இந்த மாபீயா கும்பல் ஒத்துழைப்பை பேணி வருகின்றது.


ஜனாதிபதி தலைமையில் அண்மையில் பாதுகாப்பு உயர்மட்டத்தினர் நடத்திய கூட்டத்திலும் இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகருடன் நேரடித் தொடர்புகளை சில குழுக்கள் பேணி வருவதா தெரிவிக்கப்படுகிறது.

ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் மற்றும் சட்டவிரோத பொருட்கள் நாட்டிற்கு கடத்தப்படுகின்றன. இதன் மூலம் நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்க முயற்சிப்பதாக அரச புலனாய்வுப் பிரிவினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சுற்றுலா விசா மூலம் நாட்டுக்குள் பிரவேசித்து இங்கு திருமணம் செய்து கொண்டு முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இவ்வாறான பாகிஸ்தானியர்கள் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளால் பாகிஸ்தானின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)



லண்டனில் வாழ் புலம்பெயர் தமிழரான இ.மதீசனின் நிதியுதவியுடன் ஓமந்தை மத்திய கல்லூரியில் கல்விபயிலும் மாணவனான இ. பவேந்திரனின் ஏற்பாட்டில் ஓமந்தை மத்திய கல்லூரிக்கு முன்பாக பேருந்து தரிப்பிடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இந்த நிகழ்வில் இக்கல்லூரி அதிபர் [illegible] அடிக்கல் நாட்டி வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்- [illegible])

# விடுதலையாகும் சிறைக்கைதிகளை சமூகம் தன்னுடன் இணைக்க வேண்டும்

## யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து விடுதலையாகும் கைதிகளை முன்னையவர்களாக நோக்காது, சமூகம் தன்னோடு இணைத்துக் கொள்ள வேண்டும் என யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் தெரி வித்துள்ளார்.

யாழ். சிறைச்சாலை கைதிகளுக்கான விளையாட்டு நிகழ்வொன்று நேற்றைய தினம் யாழ். சிறைச்சாலை பிரதான அதிகாரி எஸ்.இந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

குற்றம் புரிந்து அதற்கான தண்டனையை சிறைச்சாலையில் அனுபவித்து விட்டு கைதிகள் வெளியேறுகின்றனர். அவர்களை இச்சமூகம் புறந்தள்ளி விடாமல் தம்மோடு இணைத்துக் கொள்ள வேண்டும். இதே போல் கைதிகளும் சிறைச்சாலையில் தண்டனைக்காலம் முடிவடைந்து வெளியேறும் போது தமது முன்னைய நிலையினை மாற்றி புதியவர்களாகவே வெளியேற வேண்டும். சமூகம் அவர்கள் செய்த பழைய குற்றங்களை மன்னித்து தன்னோடு இணைத்து நற்பிரஜைகளாக்க வேண்டும்.

இந்தச் சிறைச்சாலை இடப்பற்றாக்குறையான இடமாக உள்ளது. இதனை வேறொரு விசாலமான இடத்தில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். ஒவ்வொரு கைதிகளுக்கும் வேறுபட்ட திறமைகள் உள்ளன. அத்திறமைகளை அவர்கள் சிறைச்சாலைகளில் இருக்கும் காலங்களில் வளர்த்து வருவார்களாயின் சிறைச்சாலையில் இருந்து வெளியேறிய பின் நல்ல தொழில் ஒன்றில் ஈடுபட அவர்களால் முடியும்.

கைதிகளின் நலன் கருதியும் கைதிகளின் கருத்துக்களையும் செவிமடுத்தும் யாழ். சிறைச்சாலை நலன்புரிச் சங்கம் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை பாராட்டுக்குரியதொன்றாகும் என்றார்.

மேலும் இந்நிகழ்வில் யாழ். மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா, மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ். சிறைச்சாலை நலன்புரிச் சங்க தலைவியுமான சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் , யாழ். சிறைச்சாலை நலன்புரிச் சங்கச் செயலாளர் சட்டத்தரணி பார்த்தீபன் ஆகியோர் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-4)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து (V)<br>நட்சத்திரம்:அச்சுவினி 2<br>உயரம் :5'6"<br>கி.பா:- 36, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: O/L<br>அமெரிக்க PR<br>தொ.இ: B -494 | பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்:உத்தரம் 2<br>உயரம்:5'<br>கி.பா: 24.5<br>தகைமை/தொழில்: A/L<br>முகாமைத்துவ உதவியாளர்(அரச)<br>தொ.இ: G -677 |
| பிறப்பு: 1973 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 3<br>உயரம்: 5'1"<br>கி.பா:18.75, 4 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: O/L,<br>தனியார் நீதிமன்றம்<br>விவாகரத்து பெற்றவர்<br>எ.பா:விவகாரத்தும்<br>ஏற்கப்படும் தொ.இ: B -490 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 3<br>உயரம் : 156 செ.மீ<br>கி.பா: 24<br>தகைமை/ தொழில்:விவசாயபீட<br>இறுதியாண்டு தொ.இ: G-678 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 2<br>உயரம்: 5'5"<br>கி.பா:97, 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: O/L<br>வியாபாரம்<br>தொ.இ: B-491 | பிறப்பு: 1982 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'4"<br>கி.பா: 31.5<br>தகைமை/ தொழில்: Business and N.R)<br>பட்டதாரி Human Resource<br>தொ.இ: G -680 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 3<br>உயரம்: 5'4"<br>கி.பா:24.75, 12இல் செவ்<br>தகைமை/தொழில்: O/L,<br>(UK Not PR) work permit<br>தொ.இ: B -493 | பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>உயரம்: 5'<br>கி.பா:44.5<br>தகைமை/ தொழில்: BSc, BA படிக்கின்றார்<br>பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: G -681 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக முறைசாராக் கல்விப் பிரிவில் உதவிக்கல்விப்பணிப்பாளருக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)


தீவகக் கல்வி வலயத்தில் முறைசாராக் கல்விப்பிரிவிற்கான உதவிக்கல்விப்பணிப் பாளர் பதவி வெற்றிடம் எதிர்வரும் ஜுலை 31 ஆம் திகதி ஏற்படவுள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் வெற்றிடத்திற்கு தீவக கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் தரம் 1,2-I தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரியர் தரம் 1 இனைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத நிலையில் ஆசிரியர் தரம் 2-I இனைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

தீவகக் கல்வி வலயத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

அத்துடன், விண்ணப்பதாரி தீவக சூழல் பற்றி பூரண அறிவைக் கொண்டிருப்பதுடன் குறைந்தது 3 வருடங்கள் தொடர்ச்சியாக தீவக வலயத்தில் சேவையாற்றக்கூடிய வயதையும் கொண்டிருக்க வேண்டும் என தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் அறிவித்துள்ளார். (செ-2)



நன்றி: மிரர்

# 54 மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது



நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான காணியில் 54 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடி கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சபையின் தவிசாளர் வி.வசந்தகுமார் தலைமையில் இடம் பெற்றது.

பொருள்தார அபிவிருத்தி அமைச்சு மற்றும் உலக வங்கி என்பனவற்றின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்படவுள்ள இந்த மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியில் கலாசார மண்டபம், சிறுவர் உள்ளக அரங்கு பயிற்சி நிலையம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் தெரிவித்தார்.

அத்தோடு பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இன்று (நேற்று) இந்த கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்படு கின்றது எனவும் குறிப்பிட்டார். மேலும் இந்தக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அரசாங்கம் சார்பான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார் எனவும், இதனை ஆளும் தரப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் சபையின் செயலாளரினால் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதோடு இவ்வாறான அறிவித்தல் விடுக்குமாறு தனது மேலதிகாரி பணிப்புரை விடுத்திருக்கிறார் எனவும் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், ஆளும் தரப்பினரான நாம் இதனை எதிர்த்து சட்டப்படி எந்தவிதமான சுற்று நிருபங்கள் மூலமோ அல்லது கடிதம் மூலமோ இது தொடர்பில் முன்னறிவித்தல் கொடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியதோடு இன்று (நேற்று) நல்லூர் பிரதேச சபையின்ஆளும் தரப்பு உறுப்பினர்கள் பத்துப் பேரும் இணைந்து அடிக்கல் நாட்டியுள்ளோம் என்றார்.

இதேவேளை, சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்ளாமை தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஆர். ரவீந்திரதாஸனிடம் கேட்டபோது, இந்தக் கட்டடம் அமைப்பதற்கான நிதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில் ஒதுக்கப்பட்டது.

ஆனால் ஆளும் தரப்பினர் அவரை விருந்தினராக அழைக்காது அடிக்கல் நாட்டும் நிகழ்வை நடத்தியமையால் நாம் அவ்விழாவில் பங்கு கொள்ளவில்லை என்றார். (அ-6)

## அபிவிருத்தி திட்டத்திற்கு 15.2 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

புறநெகும வேலைத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு 15.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார்

இந்நிதியில் இருந்து ஆறு வேலைத் திட்டங்களை மேற்கொள்ள திட்டங்கள் தீட்டப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சாவகச்சேரி நகர சபையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் நுணாவில் மேற்கு காந்தாளம்பிட்டி மயானப்புனரமைப்பு, சாவகச்சேரி பொது விளையாட்டு மைதான வேலி அமைத்தல், முதலியார் வெளி வீதி, ஐயனார் வீதி, கிராம்புவில் மேற்கு வீதி, கத்தாப்படி வீதி ஆகியவற்றைப் புனரமைத்தல் ஆகிய திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-29)




## ஆட்டின் விவகாரம் அடிதடியில் முடிந்தது

(கரணவாய்)

இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 9 ஆம் திகதி வல்வெட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, ஆடு பூக்கன்றை கடித்தமையால் வீட்டு உரிமையாளர் குறித்த ஆட்டைக் கட்டி வைத்துள்ளார். ஆட்டின் உரிமையாளர் தமது ஆட்டை விடுவிக்க சென்றவேளை ஆட்டின் உரிமையாளருக்கும் ஆட்டைக் கட்டிவைத்திருந்தவர்களுக்கும் இடையில் சச்சரவுமுற்றி மோதல் ஏற்பட்டது.

இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த கு.அமரசிங்கம் (வயது 50), சி.விசிந்தன் (வயது 28) ஆகிய இருவரும் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதுடன் ஒருவர் மயக்க நிலையிலும் உள்ளார். (அ-3-60)

# திறமைகளை வெளிக்கொணர ஊனம் ஒரு தடையல்ல- அரச அதிபர்

எமது வெற்றிக்கு ஊனம் ஒரு தடையல்ல என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான விளையாட்டு விழா வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச ரீதியில் திறமைகளை வெளிப்படுத்தும் வீரர்கள் இப்பிரதேசங்களுடன் மட்டுப்படுத்தப்படாது மாவட்ட ரீதியிலும் தெரிவு செய்யப்பட்டு, இந்நாட்டின் தேசிய விளையாட்டு வீரர்கள் பட்டியலிலும் தெரிவு செய்யப்படவேண்டும்.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் கடந்த காலங்களில் பிரதேச ரீதியில் தெரிவு செய்யப்படும் வீரர்கள் மாவட்ட மட்டம், மாகாண மட்டம் எனப் பங்குகொண்டு தேசிய ரீதியான விளையாட்டுக்களுக்கு தெரிவு செய்யப்படுவது அதிகரித்துக் காணப்படுகிறது.

கடந்த வருடத்தில் தேசிய விளையாட்டு வீரர்கள் பட்டியலில் 18 வீரர்கள் இப்பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே திறமையான வீரர்களுக்கு பிரதேசமோ, மைதானமோ ஒரு பொருட்டல்ல. அவ்வீரர்களின் திறமைதான் முக்கியம். அவர்கள் திறமை குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டும் நின்றுவிடாது தேசிய மட்டத்திலும் பரிணமிக்க வேண்டும்.

தற்போது அவதானித்த உதைபந்தாட்டப் போட்டியில் மாற்றுத்திறனாளி வீரர் ஒருவர் விளையாடியதுடன் அவர் விளையாட்டில் திறமையாக செயற்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

கடந்தவாரம் ஒரு வீரர் இப்பிரதேசத்தில் இருந்து காலில் சுகவீனமுற்ற நிலையில்கூட தடைதாண்டலில் வெற்றியீட்டி எமது மாவட்ட செயலகத்திற்கு சமூகம் தந்திருந்தார்.

எனவே, எமது வெற்றிக்கு ஊனம் ஒரு தடையல்ல. மாற்றுத்திறன்களைப் பயன்படுத்தி முயற்சியுடன் முன்னேறலாம்.

இப்போட்டியின் இடைவேளை நிகழ்வின் போது சுகநலம் பேணும் உடற்பயிற்சியும் யோகாசனப் பயிற்சிகளும் இடம்பெற்றன. இவை எமது வாழ்விற்கு அத்தியாவசியமானவையாகும்.

இப்பிரதேசத்தில் உள்ள வீரர்கள் இன்னும் தமது திறமைகளை வெளிக்காட்டி மேலும் வளர்ச்சியடையவேண்டும் என்பது எனது பேரவா என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமை தாங்கினார். (அ-3-19)



யாழ்.சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வு நேற்றைய தினம் சிறைச்சாலை முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் அமர்ந்திருப்பதையும் விளையாட்டு நிகழ்வு இடம்பெறுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைகளை மீள் நிர்ணயம் செய்ய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன

## அமைச்சர் ஜோன் செனவிரத்ன

(கொழும்பு)

**எல்லை மீள் நிர்ணய நடவடிக்கைகள் மூலம் காலங்காலமாக இருந்து வந்துள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார். இவ்விடயங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,**

அவசியமற்றவை எனக் கருதப்படும் கிராமசேவகர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளை நீக்கி, இரண்டை ஒன்றாக இணைத்து பலப்படுத்தப்படும் சிபாரிசுகளும் எல்லை மீள் நிர்ணய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எல்லை மீள் நிர்ணயம் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழு, அதன் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளதுடன், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அதனைக் கையளித்துமுள்ளது. அந்தஅறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு உத்தியோக பூர்வமாகக் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எல்லை மீள் நிர்ணயம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கும்போது அவசியமாக தீர்க்கப்படவேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன.


அதேபோன்று பலகாலமாக கவனத்திற் கொள்ளப்படாத சில விடயங்களும் இதில் அடங்குகின்றன.

நாட்டின் சில பிரதேசங்களில் மிகச் சிறிய பிரதேச எல்லைகளைக் கொண்டதும் மிகக் குறைந்த சனத்தொகையைக் கொண்டதுமான பல பிரதேசங்கள் உள்ளன. இத்தகைய பிரதேச செயலக அல்லது கிராம சேவகர் பிரிவுகள் அயலிலுள்ளவற்றோடு இணைக்கப்படலாம். முக்கிய காரணங்கள் இருந்தாலொழிய, இத்தகைய பிரிவுகள் நீக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று பிரிவுகள் ஒன்றிணைக்கப்பட்டு பலப்படுத்தப்படுவது சிறந்தது என இனங்காணப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நிலவும்இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தற்போதைய அரசாங்கம் இதற்கென ஒரு குழுவை நியமித்து செயற்படுத்தி வருகிறது.

அக்குழு நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று மாவட்டச் செயலாளர்களினதும் பிரதேச செயலாளர்களினதும் உதவிகளுடன் பிரதேச மக்கள் அமைப்புக்களினதும் பிரதிநிதிகளினதும் கருத்துக்களைப் பெற்று, மீள் நிர்ணய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இக்குழுவின் விதந்துரைகள் நடை



முறைப்படுத்தப்படும் போது நீண்ட கால பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைப்பது உறுதி எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# அஸ்வமேத யாகமும் ஊர்வலமும்

காரைநகர் புகல் சிவசுப்பிரமணிய ஆலயத்தின் நித்திய உற்சவத்தின் ஒரு வருட பூர்த்தியும் அஸ்வமேத மஹா யாகமும் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமைவரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு மேற்படி ஆலயத்திலிருந்து காலை 7.12 இற்கு ஊர்வலம் ஆரம்பமாகிஆலடி வீதியூடாக பொன்னாலை, மூளாய், சுழிபுரம் சித்தன்கேணி சங்கானையை காலை 10 மணிக்கு சென்றடையும். தொடர்ந்து அளவெட்டி ஊடாக 12 மணிக்கு சுன்னாகத்தை வந்தடைந்து பின்னர் அங்கிருந்து புத்தூர் சந்தி, 750 இலக்க பேருந்து பாதை வழியாக பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி சந்தியை வந்தடைந்து கொடிகாமம்- நெல்லியடி பாதை வழியாக சுட்டிபுரம் கோயிலைத் தரிசித்து நிற்கவுள்ளது. (அ)

# அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கி ழமை பிற்பகல் ஒரு மணிக்கு தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (அ-3-29)

# மதவாச்சியிலிருந்து மடுவுக்கு புகையிரத போக்குவரத்து

மடுமாதா திருத்தலத்துக்கான புகையிரத சேவை நாளை 14 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. முதலாவது புகையிரதம் அநுராதபுரத் திலிருந்து மடுத்திருத்தலம் வரை அன்றைய தினம் காலை 9 மணிக்கு தனது பயணத் தை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த முதலாவது புகையிரதத்தில் பொது மக்களுடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, பிரதி அமைச்சர் ரோஹன திசாநாயக்க ஆகியோருடன் இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தாவும் மடுத்திருத்தலம் வரை பயணிக்கவுள்ளனர்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மதவாச்சியிலிருந்து மடு வரைக்குமான ரயில் பாதை புனரமைக்கப்பட்டுள்ளது. 43 கிலோ மீற்றர் நீளமான இந்த ரயில் பாதையை மீள நிர்மாணிப்பதற்காக இந்தியய நிறுவனமொன்று 81.3 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளதுடன் இலங்கை அரசாங்கம்ஆயிரத்து 223.5 மில்லியன் ரூபா நிதியை செலவிட்டுள்ளதாக புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, மடுவுக்கும் தலைமன்னாருக்குமிடையிலான ரயில் பாதையின் நிர்மாணப் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. நிர்மாணப்பணிகள் எதிர்வரும் செப் டெம்பர் மாதத்தில் நிறைவடைய வுள்ளதாக புகையிரத திணைக்கள பொது முகாமையா ளர் விஜயசமரசிங்க தெரிவித்துள்ளார். மடுவுக் கும் தலைமன்னாருக்கும் இடையேயான ரயில் பாதை 63 கிலோமீற்றரைக் கொண்ட தாகும்.

இந்த ரயில் பாதையை நிர்மாணிப் பதற்கென இந்திய நிறுவனமொன்று 140 மில்லியன் அமெரிக்கன் டொலரை வழங்கி யுள்ளதுடன் இலங்கை அரசாங்கம் ஆயிரத்து 606.2 மில்லியன் ரூபா நிதியை செலவிட்டுள்ளது., இதன் ஒரு அம்சமாகவே மதவாச்சி- மடு புகையிரதப் பாதையும் மடு- தலை மன்னார் ரயில்பாதையும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

நாளை 14 ஆம் திகதி மடு திருப்பதிக்கான ரயில் சேவை ஆரம்பமாவதுடன் இம்முறை மடுத்திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களுக்கு இது பெரும் வரப் பிரசாதமாக அமையும். அதேவேளை, எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் மடு- தலைமன்னார் ரயில் சேவையும் ஆரம்பமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கை சுற்றுலா மையங்கள் குறித்து வெளிநாடுகளில் பிரசாரம்

## சுற்றுலாத்துறையின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிக சுற்றுலாப் பயணிகள் இருப்பதாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள நாடுகளில் இலங்கையின் சுற்றுலா மையங்கள் தொடர்பில் விசாலமான பிரசார திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக இலங்கை சுற்றுலா சபையின் தலைவர் பாஸ்கர சேனாங்க குணரத்ன அறிவித்துள்ளார். இதனடிப்படையில் சீனா, இந்தியா, ரஷ்யா, கொரியா, மத்திய கிழக்கு நாடுகளில் இத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்காலத்தில் இவை பிரமாண்டமான முறையில் முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டில் 10 இலட்சத்து 5 ஆயிரத்து 605 உல்லாசப் பயணிகள் வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்துள்ளனர். இது சுற்றுலாப் பயணத்துறையின் 17.5 சதவீத வளர்ச்சி எனவும் தெரிவித்ததுடன்,


2012 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக இலங்கைக்கு ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 427 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக கிடைத்துள்ளதெனவும் இது சுற்றுலாத்துறை வரலாற்றில் 44 சதவீத வளர்ச்சி எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

2016 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் உல்லாசப் பயணிகளை இலங்கையை நோக்கி வரவழைப்பதே எமது பிரதான இலக்காகும்.

இதன் மூலம் 2.75 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்றுக் கொள்வதையும் 5இலட்சம் மக்களுக்கு சுற்றுலாத் துறையில் தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்வதையும் குறிக்கோளாகக் கொண்டே எமது வேலைத்திட்டங்களை முன்னகர்த்தி வருகிறோம்.

ஏற்கனவே இந்தியாவின் பெங்களூர் மற்றும் மும்பையில் மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதெனவும் தெரிவித்தார்.

இத்திட்டத்தை மேலும் விஸ்தரிக்கும் வகையில் தற்போது இலங்கையில் இனங் காணப்பட்டுள்ள 10 முக்கிய சுற்றுலா மையங்களான சிகிரியா, பொலனறுவை, அநுராதபுரம், கண்டி, நீர்கொழும்பு, களுத்துறை, யால தேசிய பூங்கா, வில்பத்து தேசிய பூங்கா, உடவளை, மின்னேரியா ஆகிய பிரதேசங்களை உல்லாசப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மெருகூட்டும் நடவடிக்கைகளில் சுற்றுலாச் சபை அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)





திருநாவுக்கரசு நாயனார் சுவாமிகளின் குருபூசை நிகழ்வுகள் அண்மையில் முழங்காவில் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றன. இக்குருபூசை நிகழ்வின் போது திருநாவுக்கரசு நாயனாரின் திருப்படம் தாங்கிய பவனி குமுழமுனை, கரியாலை நாகபடுவான், 19 ஆம் கட்டை கிருஸ்ணாநகர், 31 ஆம் கட்டை, அன்புபுரம், முழங்காவில் அறநெறிபாடசாலை ஆகிய இடங்களிலிருந்து முழங்காவில் பிள்ளையார் ஆலயம் நோக்கி செல்வதையும் குருபூசை நிகழ்வில் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மற்றும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

454

# பலியாத தந்திரம்

அம்புலிமாமா கதைகள்



ஒரு ஊரில் ஒரு பணக்காரன் இருந்தான். அவன் மனது தாராளமானது. கேட்பவருக்கு இல்லையெனாது கொடுத்து வந்தான். இது அடுத்த ஊரிலுள்ள ஒரு பணக்காரனுக்கு பொறுக்கவில்லை. அவனோ பெரிய கஞ்சத்தனமுடையவன். ‘அவனிடம் யாராவது எதையாவது கேட்டால் அவர்களைத் திட்டி அனுப்பிவிடுவான். இதனால் மக்கள் அவனை இகழ்ந்து வந்தனர்.

அந்தக் கஞ்சத்தனமானவனுக்கு தான் நல்ல பெயர் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. ஆனால், அதற்காக ஒரு தம்பிடிகூட செலவு செய்யக்கூட தயாராவில்லை. அப்போது அவனது நம்பிக்கைக்குப் பாத்திரமான வேலைக்காரன் அவனுக்கு ஒரு உபாயம் கூறினான்.

“எஜமானே! நீங்கள் தர்மப்பிரபு என்ற பெயரை அடைவது சிரமம். ஆனால், அடுத்த ஊரில் இருக்கும் அந்தப் பணக்காரக் கொடையாளியை ஏமாற்றி, அவர் வாயாலே உங்களைப் புகழும்படி செய்யலாம். அவர் பிறரிடம் உங்களைப் பற்றி புகழ்ந்து கூற உங்களுக்கும் நல்ல பெயர் கிடைக்கும். ஒருநாள் அவரை விருந்துண்ண இங்கு கூப்பிடுங்கள். அச்சமயம் நான் பல வேடங்களில் பலமுறை வந்து உங்களிடம் ஏதாவது யாசகம் கேட்கிறேன். நீங்களும் ஒவ்வொரு முறையும் நூறு வராகன்கள் வீதம் கொடுத்துக்கொண்டே இருங்கள். அதைக் கண்டு அப்பணக்காரர் தான் கண்ணால் கண்டவற்றைப் பிறரிடம் கூறுவார். இதனால் உங்களுக்கு நல்ல பெயரு கிடைக்கும். உங்களிடம் இருந்து பெற்ற பணத்தையும் நான் உங்களுக்கு திருப்பிக்கொடுத்து விடுவேன்” இதுதான் அவனது உபாயம்.

அவனது யோசனை மிகவும் பிடித்துப்போகவே, அந்தக் கஞ்சப்பிரபு உடனே தனது வேலையாளை அனுப்பி தர்மப்பிரபுவை தன் வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தார். அந்த அழைப்பைக்கேட்டு அவர் ஆச்சரியமடைந்தார்.



“இதென்ன உன் எஜமானா, எனக்கு விருந்தளிக்கப் போகிறார்? இது நிஜமா?” என்று அவர் கேட்டார். அதற்கு அந்த வேலைக்காரனும் “ஐயா நீங்கள் என் எஜமானைச் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. அவர் யார் வந்து கேட்டாலும் நூறு வராகன்களுக்குக் குறைந்து கொடுப்பதே இல்லை. வேண்டும் என்றால் நீங்களே நேரில் வந்து பார்க்கலாம். மேலும், இதுவரை அவர் செய்ததான தர்மங்கள் எவ்வளவோ! நாளை உங்களுக்கு விருந்தளிப்பதன் நோக்கம் அவர் லட்சம் தானங்களைச் செய்ததைக் கொண்டாடத்தான். அதற்கு விஷேச முறையில் கோவிலில் பூஜையும் நடக்கப் போகிறது அதேசமயம் உங்களையும் கௌரவிக்க விரும்புகிறார்” என்றார்.

அந்த தர்மப்பிரபுவும் மறு நாள் காலை வருவதாகச் சொல்லி அனுப்பினார். மறு நாளும் அவர் அங்குபோய்ச் சேர்ந்தார். அப்போது கஞ்சப் பிரபு, “நீங்கள் உங்களோடு வேலையாள் யாரையும் அழைத்து வரவில்லையா?” எனக்கேட்டான். அதற்கு அவர், “அவனை ஒரு வேலையாக அனுப்பியிருக்கிறேன். அதை முடித்துவிட்டு அவன் இங்கே வந்து விடுவான்” என்றார்., அபபோது, அந்த கஞ்சப்பிரபுவின் வேலையாள் “கோவிலுக்குப் போய்விட்டு வருகிறேன்” எனக்கூறிச் சென்றான்.

அப்போது கஞ்சப்பிரபு “நான் தானம் செய்வது பற்றி பறைசாற்றிக் கொள்வது இல்லை. யாருக்கும் தெரியாமல்தான் தானம் செய்வேன்” எனக்கூறினான். இதற்குள் வெளியே சென்ற அவனது வேலைக்காரன் ஒரு கிழப்பிச்சைக்காரன் வேடத்தில் அங்கு வந்தான். உடனே, அந்தக் கஞ்சப்பிரபு தன் பையிலிருந்து நூறு வராகன்களை எடுத்து அவனுக்கு கொடுத்து அனுப்பிவிட்டான்.

அவன் மேலும், அந்த மர்மப் பிரபுவுடன் பேசிக் கொண்டிருக்கையில் ஒரு பைராகி, ஒரு ஊமை, ஒரு குருடன், ஒரு செவிடன், ஒரு நொன்டி, ஒரு வழிப்போக்கன், ஒரு குடுகுடுப்பைக்காரன் என்று வந்து கொண்டே இருந்தனர். அவர்களுக்கெல்லாம் நூறு வராகன்கள் வீதம் கஞ்சப்பிரபு கொடுத்தே வந்தான். அன்று வந்தது பத்துப் பேர். தன் வேலையாள்தான் இப்படி வேஷம் போட்டு வந்தானென அவனுடைய மனதிற்குள்ளே சிரித்துக் கொண்டான்.

அப்போது தர்மப்பிரபு “ஆகா! இது மாதிரியான கொடையாளியை நான் கண்டதே இல்லை. இன்று ஒரு நாள் மட்டும் ஆயிரம் வராகன்கள் கொடுத்திருக்கிறீர்களே” என்றார். அந்தக் கஞ்சப் பிரபுவும், “இன்று வந்தவர்களின் தொகை குறைவு. பத்துப்பேர்கள் வந்தனர். ஆயிரம் வராகன்கள் கொடுத்தேன். அவ்வளவுதான்” என்றான்.

மத்தியானமானதும் கஞ்சப் பிரபுவின் வேலைக்காரன் எப்போதும் போல உடையுடுத்தி கையில் தட்டோடு உள்ளே போய்க்கொண்டே “பூஜை முடிந்துவிட்டது. பிரசாதமும் கொண்டு போகிறேன்” என்றான். அவன் பின்னால் கஞ்சப்பிரபுவும் உள்ளே சென்றான்.



அவன் தன் வேலையாளிடம் “பேஷ்! வெகு நன்றாக நடித்தாயே. எங்கே நான் கொடுத்த பணம்” என்றான்.

“இதோ, ஐநூறு வராகன்” என்று கூறி, அவன் பணத்தை



எடுத்துக் கொடுத்தான். “ஐநூறா? என்ன விளையாடுகிறாயா? நீ பத்து தடவை வேறு, வேறு வேடம்போட்டு வரவில்லையா? நான் ஒவ்வொரு தடவையும் நூறு வராகன் உனக்குத் தரவில்லையா? ஆக, நான் உனக்கு ஆயிரம் வராகன் அல்லவா கொடுத்து இருக்கிறேன். இப்படி வாய் கூசாமல் ஐநூறு வராகன்தான் கொடுத்தேன் என்று பொய் சொல்கிறாயே உனக்கு வெட்கமா இல்லையா?” என்று மிகுந்த கோபத்துடன் வேலைக் காரனைப் பார்த்து சீறினான்.

அதைக்கேட்டு திகைத்து நின்ற வேலைக்காரன், “என்ன சொல்கிறீர்கள் எஜமான்? நான் எங்கே பத்து தடவைகள் வந்தேன்? ஐந்து தடவைதான் வந்தேன்! நீங்கள் ஒவ்வொரு தடவையும் கொடுத்த நூறு வராகன் சேர்ந்த ஐநூறு வராகன்தானே ஆகும்!” என்றான். தான் ஐந்து தடவை மட்டுமே மாறு வேடத்தில் வந்ததாக சத்தியம் செய்தான்.

ஆனால், கஞ்சப் பிரபுவோ அதை தான் நம்பவில்லை என்று கூறினான். அப்போது அடுத்த ஊரிலிருந்து வந்த தர்மப்பிரபு “ஆமாம். அவன் கூறுவது முற்றிலும் உண்மையே. அவன் ஐந்து வேடங்களில் மட்டுமே வந்தான். மீதம் ஐந்து வேடங்களில் வந்தது என்னுடைய வேலையாள். உங்கள் ஐநூறு வராகன்களை என்னுடைய வேலைக்காரன் இங்கு கொண்டு வந்துவிடுவான் பயப்படாதீர்கள். அவனும் நம்பகமானவனே” என கூறிக் கொண்டே உள்ளே வந்தார்.

அதைக் கேட்ட, கஞ்சப்பிரபு வெட்கித் தலைகுனிந்தான். அவன் தந்திரம் பலிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டேன் சித்தர் பெருமானை




02 அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

சித்தர் பெருமானின் ஆச்சிரமம், சென்னையிலிருந்து உளுந்தூர்பேட்டை வழியாக, திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் திருச்சிக்கு முன் உள்ள, பெரம்பலூர் எனும் ஊருக்கு வெளியே காட்டுப்பகுதியில் இருக்கிறது. காசி என்பவர் சாமியின் பரமபக்தர்.

இவர், காலஞ்சென்ற புகழுக்குரிய ஜூபிடர் சோமசுந்தரம் அவர்களின் புதல்வர். தற்போதைய சத்யா ஸ்ரூடியோ புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆரின் கையில் வருவதற்கு முன்னர் அந்த ஸ்ரூடியோவின் பெயர் நெப்டியூன் ஸ்ரூடியோஸ் என்பதாகும்.தங்கப்பதுமை, அரசிளங்குமாரி போன்ற பெரிய நடிகர்கள் நடித்த படங்கள் எல்லாம் தயாரான இடம். தந்தைக்கு பிறகு காசி அவர்கள் பல வெற்றிப் படங்களைத் தயாரித்தவர். குறிப்பாக கே. பாலச்சந்தர் அவர்கள் இயக்கத்தில் வெளிவந்த பாமாவிஜயம் என்ற வெற்றிப்படம்.

ஸ்ரூடியோவை விற்றபின்- திரு காசி அவர்கள ஜூபிடர் பிக்சர்ஸ் ஆபிஸிலேயே தனது அலுவலகத்தை நடத்திக்கொண்டிருந்தார்கள். சத்யா ஸ்ரூடியோவின் பக்கத்து காம்பவுண்டில் இயங்கி வந்த காசி அவர்களின் அலுவலகத்திற்கு சித்தர் சுவாமிகள் மாதம் ஒரு முறை வந்து ஒரு வார காலம் தங்குவது வழக்கம். அங்கு சித்தர் அவர்கள் தங்கி இருக்கும் வரை அவரைக் காணவருவோருக்கு தினமும் காலை, மதியம், இரவு உணவுப் பந்திகள் நடக்கும். இதையெல்லாம் பார்த்து கொண்டு சுவாமிகள்,அதியாக தியானித்துக்கொண்டிருப்பார்.

சுவாமிகள் வரும்போது எல்லாம் அவருக்கு பணிபுரிபவர்களும் வருவார்கள். பின்னர் அவர் பெரம்பலூர் செல்லும்போது, அவர்களும் கூடச் சென்றுவிடுவார்கள். அவர்களில் சுவாமிகளிடம் மிகவும் நெருக்கமாக இருந்த நண்பர் பெயர் திரு.கல்யாணசுந்தரம் அவர்கள். சுவாமிகள் சென்னைவரும் போதெல்லாம் நானும் தவறாமல் சென்று சித்தரிடம் சேர்ந்துவிடுவேன். அவருக்கு பணிவிடைகள் செய்வேன். இதனால் நான் அங்கு வரும் எல்லோருக்கும் நான் அறிமுகமானேன். எனக்கு வேண்டியவர்கள், உறவினர்கள், நண்பர்கள், சினிமா உலக நண்பர்கள்



பலரைச் சித்தர் பெருமானிடம் அழைத்துச் சென்று,அவர்களின் நோய்களுக்கு மருந்து வாங்கி தருவது எனது வழக்கமாக இருந்தது. மருத்துவத்திற்கு என்று, சாமிகள் யாரிடமும் தொகை நிர்ணயிப்பதில்லை. சிலர், அவர்களாகவே ஒரு தொகையை கொடுப்பார்கள். அதை அவர் தன்கையால் வாங்க மாட்டார். அவருடன் வருபவர்கள் அதைப் பெற்றுக்கொள்வார்கள். இன்னும் சிலர் நான் என்ன தரவேண்டும் என்று கேட்பார்கள். அதற்கு சித்தர் பெருமான், "அன்னதானத்திற்கு உங்களால் என்ன பொருள் வாங்கித்தரமுடியுமோ அதை வாங்கித் தாருங்கள்" என்று புன்னகையோடு சொல்வார்! இதைக்கண்ட எனக்கு இக்காலத்தில் இப்படி ஒருவரா? என்று அதிசயமாய் இருக்கும்! அதனால் சித்தரிடம் என் ஈடுபாடு அதிகமாகியது. சித்தர் பெருமானுடனேயே இருக்கவேண்டும் என்ற எண்ணம் நாள் தோறும் என்னுள் வளர்ந்து கொண்டே இருந்தது. ஆனால் அதற்கான சமயம் சரியாக அமையவில்லை. மேலும், அந்நேரத்தில் இயக்குனா கங்கை அமரன் அவர்களின் இயக்கத்தில் நாலைந்து படங்கள் தொடர்ந்து வேலை நடந்து வந்ததால் எனக்கு ஒய்வு கிடைக்கவே இல்லை. இருப்பினும் சித்தர் பெருமான் சென்னை வந்து விட்டால் எப்படியாவது சமாளித்து அவரிடம் சென்றுவிடுவேன்.

சினிமா உலகின் நெருங்கிய நண்பர்கள் சிலர் என்னைக் கேலி பேசுவார்கள். "வாங்க சின்ன சித்தர்" என்று வரவேற்று சிரிப்பார்கள். ஆனால் நான் அவர்களை கண்டுகொள்வதில்லை. என் குடும்பம், நான் சித்தரை நோக்கி ஓடுவது கண்டு எதிர்ப்புத் தெரிவிக்கவே செய்தது. நான பெரிய நடிகனாகவோ, அல்லது பெரிய சினிமா இயக்குனராகவோ வருவேன் என்று கனவு கண்டவர்கள் அவர்கள். அதோடு குடும்பத்தின் நடுமகனான நான் எங்கே. சாமியாராகி விடுவேனா? என்று அஞ்சினார்கள், தந்தையாருக்கோ பணியிலிருந்து ஒய்வு பெற இன்னும் சில ஆண்டுகள் இருந்த நிலையில் மகன் தலையாட்டிச்சித்தருக்கு அடிமையாகி கிடக்கின்றானே, மகனுக்கு திருமணத்தை முடித்து, குடும்பப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்றால், இவன் துறவி பின்னால் செல்லத் தொடங்கி விட்டானே என்றெல்லாம் வேதனைப் பட்டனர். ஆனால் இதெல்லாம் என்னைக் கொஞசம்கூட பாதிக்கவில்லை.

(தொடரும்)

# யாழ்ப்பாணம் இலங்கையின் முதல் இராணுவ நகரமாக மாற்றப்படுகின்றதா?

30 ஆண்டுகாலப் போர் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் இதனை வெற்றி கொண்ட நாட்டின் பெரும்பான்மை சமூகமும், பாதுகாப்புப் படையும் மிகவும் பெருந்தன்மையுடனும், தாராள மனப்பாங்குடன் நடந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் ,இதற்கு மாறாக, இவர்கள் போர் மமதையுடன் நடந்து கொண்டனர்.

இலங்கையர்களின் காஸா என நோக்கப்படும் வடக்கில் இலங்கை அரசாங்கமானது பொதுமக்களுக்குச் சொந்தமான நிலங்களை அபகரிப்பது தற்போது அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தனியாருக்குச் சொந்தமான 6000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பை இலங்கை அரசாங்கம் தனக்குச் சொந்தமாக்கத் தீர்மானித்துள்ளதானது தற்போது இலங்கையின் வடக்கில் எவ்வாறான தீவிரமான சூழல் நிலவுகின்றது என்பதை தெளிவாகக்காட்டுகின்றது.

இவ்வாறான நிலைப்பாடு தொடர்பாக இலங்கையில் செயற்படும் முக்கிய பொது அமைப்புகளான மாற்றுக் கொள்கைக்கான மையம் மற்றும் தேசிய சமாதானப் பேரவை ஆகிய இரண்டும் தமது எதிர்ப்பை இரு வேறு அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளன. மாற்றுக்கொள்கைக்கான மையமானது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொண்டகளஆய்வு அறிக்கையில், இங்கு நிலவும் நில அபகரிப்பு தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை தொடரும் போது பல ஆயிரக்கணக்கான மக்கள் தமது நிலங்களை இழக்க வேண்டி ஏற்படலாம். இதனால் இலங்கை அரசாங்கம் இதன் தீவிரத் தன்மையை கருத்திற்கொண்டு வெளிப்விக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலை தற்போது வடக்கில் வாழும் பெரும்பாலான மக்கள் மத்தியில் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

போரின் விளைவால் இடம்பெயர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்படும் என மே 2009இல் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற கையோடு அரசாங்கத்தால் வாக்குறுதி வழங்கப்பட்டதாகவும் தேசிய சமாதானப் பேரவை தற்போது வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில், பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது எனவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையான, மக்கள் பங்களிப்புடன், நீதியான நடவடிக்கைகளை மிகத் துரிதமாக எடுக்க வேண்டும் என மாற்றுக்கொள்கைக்கான மையம் தனீது கள ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளை இலங்கை அரசாங்கம் சுவீகரிப்புச் செய்வதால் மக்கள் இதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதாக தேசியசமாதானப் பேரவையின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 24 கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமக்குச் சொந்தமான காணிகளை இழக்கவேண்டிய ஆபத்தில் உள்ளதால் இதனைத்தாம் ஒரு போதும் இழந்துவிடக்கூடாது என்பதற்காக இவ்வாறான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் எனவும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் தான் வழங்கிய வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறிய அதே வேளை, தமது நிலங்களைத் தம்மிடம் திருப்பித்தருமாறு கோரும் பொதுமக்களை அடக்குவதற்கு பாதுகாப்புப் படையினரை பயன்படுத்துவதாகவும் தேசிய சமாதானப் பேரவையின் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் வடக்கில் வாழும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதை இலங்கை அரசாங்கம் தொடந்தும் தட்டிக் கழித்து வருகின்றது. கல்வித்துறை, காணி அதிகாரம், சமூக வளர்ச்சி, அரசியல் அதிகாரப் பகிர்வு போன்றன தொடர்பான மூலோபாயங்கள், கோட்பாடுகளில் வடக்கு தெற்கு பிரிவினைவாதம் என்பது தற்போதும் தொடர்கிறது. வடக்கு மற்றும் தெற்கில் வாழும் இனங்களின் தலைவர்கள் குறிப்பாக 20ஆம் நூற்றாண்டில் இவ்விரு இனங்களின் உறவு நிலையில் விரிசலை ஏற்படுத்துவதில் முன்னோடிகளாக காணப்படுகின்றன.

இலங்கைத்தீவு சுதந்திரமடைந்ததிலிருந்து இதனை ஆண்ட அரசாங்கங்கள்



கொழும்பை தளமாகக்கொண்ட Ceylon Today ஆங்கில ஊடகம் தனது ஆசிரியத் தலையங்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை....

தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையானதீர்வொன்றை முன்வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோதும் அவை தோல்வியில் முடிவடைந்தன. இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் ஏற்படுத்துகின்ற நடுநிலையான மீளிணக்கப்பாட்டு முயற்சிகளை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக, இவ்வினங்களின் அரசியற் தலைவர்கள் புராதனகாலத்தில் பயன்படுத்தப்பட்ட இன அதிகாரத்துவத்தை தமது முன்னைய வரலாற்றுச் சம்பவங்கள் மற்றும் வேதாகமங்கள் மூலம் நிரூபிப்பதற்கான வழிமுறையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இவ்வாறான எதிர்மறை விளைவுகள் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியானது நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதித்தது. 30 ஆண்டு காலப் போர் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் இதனை வெற்றி கொண்ட நாட்டின் பெரும்பான்மை சமூகமும், பாதுகாப்புப்படையும் மிகவும் பெருந்தன்மையுடனும், தாராள மனப்பாங்குடனும் நடந்திருக்க வேண்டும். ஆனால், இதற்கு மாறாக, இவர்கள் போர் மமதையுடன் நடந்து கொண்டனர். இதனால் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் உளவியல் ரீதியான பாதிப்பைச் சந்திக்கவேண்டியேற்பட்டது.

அண்மையில் இலங்கை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட நில அபகரிப்புச் சட்டம் மற்றும் அதன் இரண்டாவது சரத்து ஆகியவற்றின் மூலம் தற்போது பொதுமக்களுக்குச் சொந்தமான நிலங்களை அரசாங்கம் சட்டரீதியாக சுவீகரித்து வருகிறது. குறிப்பாக வடக்கில் வாழும் மக்களின் சொந்த நிலங்களை அரசாங்கம் அபகரிப்பதால் நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு இது உதவி செய்யவில்லை என கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான நிலை தொடரும்போது வடக்கில் வாழும் மக்கள் மட்டுமல்லாது நாட்டில் நிலையான சமாதானம் எட்டப்படாது தெற்கில் வாழும் மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுல்படுத்த வேண்டும். இலங்கை அரசாங்கம் மீது அனைத்துல சமூகம் அழுத்தங்களை மேற்கொண்டுள்ள இந்நிலையில் இவ்வாறான தொடர்ச்சியான தமிழர் நிலங்கள் அபகரிப்பானது கிட்டிய எதிர்காலத்தில் நாட்டை சீரழிவிற்கு இட்டுச் செல்லும் என்பது உறுதியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் ராஜித பகிரங்கமாக அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் எவரும் உடனடியாக விடுவிக்கப்படமாட்டார்கள். கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னரே விடுவிக்கப்படுவர் என கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன அறிவித்துள்ளார்.**

இவ்விடயங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கடல் எல்லைக்குள் நுழையும் இந்திய மீனவர்கள் எவரையும் முன்புபோல எவரது வேண்டுகோளின் பேரிலும் விடுவிப்பதில்லை.அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி,விளக்கமறியலில் வைத்து படகுகளையும் தடுத்து, உரிய சட்ட நடவடிக்கையின் பின்னரே அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன் பிடிப்பதற்கு எந்தவொரு நாட்டு மீனவர்களுக்கும் அதிகாரம் இல்லை. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் வந்து மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பது தொடர்பான எந்த ஒப்பந்தமும் இல்லை.

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் ஆயிரக்கணக்கான இந்திய மீனவப் படகுகள் பற்றி எடுக்கப்பட்ட புகைப்படங்களை நாம் கடந்த காலத்தில் இந்தியப் பிரதமர் மற்றும் அந்நாட்டு மீன்பிடி அமைச்சிடம் கையளித்திருந்தோம்.அவர்கள்கூட இவற்றை பார்த்து ஆச்சரி யப்பட்டனர்.

இந்தப் புகைப்படங்களைக் கையளித்த பின்னர், அப்போது தமிழக முதல்வராக இருந்த கருணாநிதி இவ்விடயம் பற்றி வாய் திறக்கவேயில்லை.

இந்தநிலையில், தற்பொழுது தமிழக முதல்வராக இருக்கும் ஜெயலலிதாவுக்கே இவ் விடயத்தைப் பெரிதுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதற்கு முக்கிய காரணம் தமிழகத்திலிருந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீன்பிடிப் படகுகளின் பெரும்பாலான உரிமையாளர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதிகள் ஆவர் .

இந்நிலையில் இலங்கைக்குள் நுழையும் இந்திய மீனவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகளை எடுக்க எமது அரசாங்கம் தீர்மானித்துள்ளது.பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் கடற்படைத்தளபதியுடன் கலந்துரையாடி கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இலங்கைக் கடற்பரப்பில் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் எவரது வேண்டுகோளின் பேரிலும் வற்புறுத்தலின் பேரிலும் அவர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள். நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல் கணிசமானவு குறைந்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன் பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. எனினும் இறங்கு தளமொன்றாக கச்சதீவைப் பயன்படுத்த முடியுமேதவிர, இங்கு மீன்பிடிக்க அனுமதியில்லை. வலைகளைக் காயவைத்துக் கொள்ள கச்சதீவு ஒப்பந்தத்தின் மூலம் முன்னர் அனுமதி இருந்தது. 10 வருடங்களுக்கு மாத்திரமே இந்த அனுமதியும் இருந்தது. இது தற்பொழுது காலாவதியாகியுள்ளது.

கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்வது தொடர்பான இந்த நிலைப்பாடும் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு இல்லை. கச்சதீவை இந்தியா மீளப் பெற வேண்டும் என்ற தமிழக முதல்வரின் கோரிக்கையை இந்திய மத்திய அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. கச்சதீவு தொடர்பில் இந்தியாவுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# தமிழ்,சிங்கள முகவரியைப் புகுத்தி இணையத்துக்குள் பிரவேசிக்கலாம்

உலக மக்களுக்கு இணையத்தள முகவரிகளை தமிழ், சிங்கள மொழிகளில் குறிப்பிட்டு தளங்களுக்குள் பிரவேசிக்கும் வசதிகள் தற்போது கிடைத்துள்ளதாக இலங்கை தகவல் வெகுசன தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

தமிழ், சிங்கள மொழிகளில் பணியாற்றும் மக்கள் மத்தியில் கணனி மற்றும் இணையத்தளத்தை அண்மிக்கச் செய்வதற்காகவே இவ்வாறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கணனிகளையும் இணை யத்தளத்தையும் பயன்படுத்தும்போது, தேசிய மொழிகளில் அப்பணிகளை மேற்கொள்ள முடியுமென அதன் நிறைவேற்று அதிகாரி றொஷான் தேவபுர தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள எழுத்துக்களைக் கொண்ட விசைப் பலகைகளின் அறிமுகம், தமிழ், சிங்கள யுனிகோட் அறிமுகம், எழுத்துக்களின் அளவின் அவிருத்திக்கான பயிற்சி வழங்குதல் உட்பட பல நடவடிக்கைகள் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இணையத்தளத்தில் உள்ள அநேகமான விடயங்கள் ஆங்கில மொழியில் இருப்பதால் உலக அறிவைப் பெறுவதில் ஏற்படும் அசௌகரியங்களை இதன்மூலம் குறைப்பதற்கு தமிழ், சிங்கள மொழிகளைப் பயன்படுத்தும் சகலருக்கும் இயலுமாக அமையுமென தகவல் வெகுசன தொடர்பு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ-2)

# கற்பிட்டி கடலில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

புத்தளம் கற்பிட்டி பெரிய அச்சுவேலி கடலில் கேரள கஞ்சா மற்றும் பான்பராக் போதைப் பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

இவரிடம் இருந்து 57 கிலோ 342 கிராம் கஞ்சாவும் 24 ஆயிரத்து 610 சிறிய பைக்கெற் பான்பராக்கும் மீட்கப்பட்டுள்ளன.

கற்பிட்டி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக நடவடிக்கைகளுக்காக கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பின் சந்தேகநபர் கற்பிட்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ-2)

# நியூசிலாந்தின் பால்மாவை தடைசெய்ய நடவடிக்கை

நியூசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளைத் தடை செய்வது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மைக் காலத்தில் நியூசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளில் கதிர்வீச்சு தாக்கம் உள்ளதாக வெளியான தகவலை அடுத்தே இந்த ஆராய்வு மேற்கொள்ளப்படுகிறது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட நியூசிலாந்தின் இரண்டு அமைச்சர்கள் தமது பால்மா வகைகளின் இறக்குமதியை தடை செய்ய வேண்டாம் என்று இலங்கை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் நியூசிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகள் தொடர்பில் சிங்கப்பூரில் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தர விட்டுள்ளார்.

குறித்த பால்மா வகைகளில் அடங்கியுள்ள கதிரியக்க தாக்கங்களினால் நீரிழிவு உட்பட பல்வேறு நோய்கள் ஏற்படும் என மருத்துவ துறையினர் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஷிராணி மீதான இடையூறுகளை உடனடியாக நிறுத்த வேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் 43 ஆவது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் மீது கொடுக்கப்படும் இடையூறுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத் துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி சட்டத்தரணிகள் சங்கம் இது தொடர்பில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

ஷிராணி பண்டாரநாயக்காவின் மீது தேவையற்ற ரீதியில் தொந்தரவுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்று இத் தீர்மானத்தில் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அவர் மீது இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளமை தொடர்பிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 17 ஆம் திகதி மாத்தறைக்கு வரும் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை வரவேற்பதில்லை என்று மாத்தறை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரியவருகின்றது. (அ-2)







தேசிய இளைஞர் மன்றத்தின் யாழ். மாவட்ட பெரு விளையாட்டுக்களில் பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டிகள் அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றியீட்டிய யாழ்ப்பாண இளைஞர் சம்மேளன அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழகசம்மேளன அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்
லாபஸ்தான குருவால் நாளும் வசதிகள் பெருகி வரும்!

70/100

**எதற்கும் கலங்காத மனமும் எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத குணமும் கொண்ட சிம்ம இராசி நேயர்களே!**

உங்கள்இராசிக்கு இதுவரை பத்தாம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். பத்தில் குரு இருந்தால் பதவி மாற்றம் என்பது பழமொழி. பதவி மாற்றம் ஏற்படுகிறதோ இல்லையோ பலவித பிரச்சினைகளுக்கு நீங்கள் ஆளாகியிருக்கலாம்., இனி அந்த நிலை மாறும். அல்லல்கள் தீர்ந்து ஆனந்தம் உருவாகும்.

உங்கள் இராசிக்கு 5,8 க்கு அதிபதியான குருபகவான் இப்பொழுது லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகிறார். எனவே, இனி தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரும்.

மிதுனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை மூன்று இடங்களில் பதிவாகிறது. சகோதர சகாய ஸ்தானம், புத்திர ஸ்தானம், களத்திர ஸ்தானம் ஆகிய மூன்று இடங்களிலும் நீங்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரப்போகின்றன.

சுமார் ஓராண்டுகாலம் மிதுனத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைக்கப்போகிறார். உன்னத நிலையும் ஊர் போற்றும் வாழ்க்கையும் அமையப்போகிறது.

**சுதந்திர மனப்பான்மை கொண்டவர்கள் நீங்கள்!**

உங்கள் கொள்கைகளை யாருக்கும் எதற்காகவும் விட்டுக்கொடுக்க மாட்டீர்கள். யாருடைய கட்டுக்கோப்புக்குள்ளும் இருப்பது உங்களுக்குப் பிடிக்காது. தெய்வ நம்பிக்கையை அடிப்படையாக வைத்து நீங்கள் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு செயல்களிலும் உங்களுக்கு வெற்றி கிடைக்கிறது என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொள்வீர்கள்.

உங்களுடைய களத்திர ஸ்தானாதிபதியாக சனி விளங்குவதால் தாரத்தை தேர்ந்தெடுக்கும் பொழுது மட்டும் தக்கவிதத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும். பகைவர்களைக் கூட பக்கபலமாக மாற்றிக்கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

அடுத்தவர் நலன்களுக்காக எடுத்த காரியங்களை உடனுக்குடன் முடித்துக்கொடுப்பதால்தான் பதவி வாய்ப்புக்களை நீங்கள் இயல்பாகவே வரவழைத்துக்கொள்ள முடிகிறது. முன்கோபத்தையும் முடிவுகளை திடீர் திடீரென மாற்றும் தன்மையையும் நீங்கள் மாற்றிக்கொண்டால் முன்னேற்றத்தின் முதல் படியில் நிற்கலாம்.

பதினோராம் இடத்தில் வந்து பார்த்திடும் குருதான் நின்றால், மதிப்பான வாழ்க்கை சேரும்! மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும்! துதிக்கின்ற தெய்வம் தன்னை, துணையாக்கிப் பார்த்திருந்தால், விதிகூட மாறிப் போகும்! வெற்றிகள் நாளும் சேரும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு 3,5,7 ஆகிய இடங்களை பார்க்கிறார். எனவே, அந்த ஆதிபத்தியத்திற்கு உரிய பலன்களை பஞ்சம அஷ்டமாதிபதியான குரு அள்ளி வழங்கப் போகிறார்.

குரு இருக்கும் இடத்தை விட பார்க்கும் இடத்திற்கு பலன் அதிகம் அல்லவா?

மூன்றினை குருதான் பார்த்தால் முன்னேற்றம் வந்து சேரும்! ஐந்தினை குருதான் பார்த்தால் அஞ்சிட வேண்டாம் என்பார்! ஏழினை குருதான் பார்த்தால் இல்லறம் இனிதே வாய்க்கும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எனவே, சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறப்போகிறீர்கள். மதிப்பும் மரியாதையும் இனி கூடும். தொழிலில் ஏற்பட்ட தொய்வு நிலை இனி அகலும். பங்குதாரர்கள் விலகினாலும் பக்கபலமான பலரும் வந்து சேர முன்வருவர்.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

குரு பதினோராம் இடத்தில் இருந்துகொண்டு அதன் பார்வையால் 3,5,7 ஆகிய இடங்களைப் புனிதப்படுத்துகின்றார். எனவே, சகோதரம், சகாயம், திறமை, நட்பு, உடல்நிலை, மேலதிகாரி , பிரயாணம், சொத்து சேர்க்கை, ஆடை, அணிகலன்கள், பிள்ளைகள், குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்வுகள், தூரதேசத்து யோகம், பூர்வீக சொத்துப்பிரச்சினைகள், வாழ்க்கைத்துணை, குடும்ப உறவு, வங்கி சேமிப்பு, வர்த்தகம், தொழில் கூட்டாளி போன்றவற்றில் எல்லாம் புதிய திருப்பங்களை உண்டாக்கப் போகிறார்.

தற்சமயம் பெயர்ச்சியான குருபகவான் சகோதர ஸ்தானத்தைப் பார்ப்பதால் உடன் பிறப்புகள் உங்கீள் கருத்துக்களுக்கு ஒத்து வருவர். அவர்கள் உதவிக்கரம் நீட்ட உங்கள் இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

மனதை வாட்டிக்கொண்டிருந்த பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்ல முடிவிற்கு வரும். மக்கள் செல்வாக்கு மிக்க சகோதரர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். இணைந்து தொழில் செய்த சகோதரர்கள் இனிப் பிரிந்து தொழில் செய்வோம் என்று சொல்வர்.

## சிம்மம்



அங்ஙனம் செய்யும் பொழுது யாருடைய பெயரில் தொழில் செய்தால் யோகம் என்று தெரிந்து செய்வது நல்லது. சகோதரி வழியில் ஏற்பட்ட சங்கடங்கள் அகலும். முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் எல்லாம் விலகுவர். இந்த நேரத்தில் உங்கள் சுய ஜாதகத்தில் குருவின் பலம் அறிந்து குறிப்பிட்ட வழிபாடுகளைச் செய்தால் தொழில் வளம் மேலோங்கும். அரசுவழிச் சலுகைகளும் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

குருவின் சப்தம பார்வை 5-ம் இடத்தில் பதிவாகிறது. எனவே, பூர்வீக சொத்துக்களால் லாபம் கிட்டும். பத்திர பதிவில் இருந்த தடைகள் அகலும். முன்னோர் சொத்துக்களை முறையாகப் பங்கிட்டுக்கொள்ள இயலவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது முறையாகப் பங்கீடு செய்து கொண்டு வீடு கட்டும் வாய்ப்புகள் உருவாகும்.

வியாபார நெருக்கடிகள் அகல விரும்பியபடியே கடனுதவி கிடைக்கும். குடும்ப உறுப்பினர்கள பெயரிலும் மனைவி, மக்கள் பெயரிலும் தொழில் தொடங்கி பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள முன்வருவீர்கள். வரன் தேடும் முயற்சியில் இருப்பவர்களுக்கு திருமண வாய்ப்பு கைகூடும். வாரிசுக்காகக் காத்திருப்பவர்களுக்கு புத்திர பாக்கியம் உருவாகும். வீடு மாற்றம், வாகன மாற்றம் செய்வது தவிர்க்க முடியாததாக அமையலாம்.

உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் இல்லற வாழ்க்கையில் இனிமை ஏற்படும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். குழந்தைகள் நலன் கருதி வங்கிகளில் சேமிக்க முற்படுவீர்கள். அந்நிய தேசத்திற்காக ஏற்பாடு செய்திருப்பவர்கள் ஒப்பந்தம் கிடைத்து உள்ளம் மகிழ்வர்.

வாழ்க்கைத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவும் வழிபாட்டின் மூலம் வளர்ச்சியைப் பெருக்கிக்கொள்ள விரும்புபவர்கள் வியாழக்கிழமை தோறும் அருகிலிருக்கும் சிவாலயத்திற்குச்சென்று குரு வழிபாட்டை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். முல்லைப்பூ சூட்டி வழிபாட்டால் எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

மிதுனத்தில் சஞ்சரிக்கும் குரு 13.11.2013 முதல் 12.03.2014 வரை வக்ர இயக்கத்தில் இருக்கிறார். சில ராசிக்காரர்களுக்கு இந்த வக்ரம் நன்மையைக் கொடுக்கும். சில இராசிக்காரர்களுக்கு இந்த வக்ரம் நன்மையை வழங்காது.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை பஞ்சம அஷ்டமாதிபதியாக குரு இருப்பதால் நெஞ்சம் மகிழும் வாய்ப்புகளும் வந்து சேரும். நினைக்க இயலாத அளவிற்கு மனக்கசப்பான தகவல்களும் வந்து சேரும்.

அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். எனவே, இழந்தவைகளை ஈடுசெய்ய முன்வருவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். ரண சிகிச்சை செய்தால்தான் குணமாகும் என்று சொன்ன மருத்துவர்கள் இனி சாதாரண மருத்துவத்திலேயே சரி செய்து விடுவர். மருத்துவச் செலவுகள் குறையும். சென்ற குருப்பெயர்ச்சியில் ஏற்பாடு செய்த சில காரியங்கள் கிணற்றில் போட்ட கல்லாக இருக்கிறதே என்று நினைத்திருப்பீர்கள். அவைகள் துரிதமாக இனி நடைபெறும்.

வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. உத்தியோகத்தர்களுக்கு திடீர் பதவி உயர்வு கிடைத்து திகைப்பை உருவாக்கும். பஞ்சமாதிபதியாகவும் குரு விளங்குவதால் பிள்ளைகள் வழியில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

உங்கள் குணத்திற்கு அவர்கள் ஒத்துவருகிறார்களா என்பது சந்தேகம்தான். அவர்களின் போக்கைக் கண்டிக்கவும் இயலாது. கட்டுப்படுத்தவும் இயலாது. கல்வி முயற்சிக்கும் கடல் தாண்டும் முயற்சிக்கும் ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பொன்னான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவன் வழிபாட்டை மேற்கொள்வதோடு அம்மன் வழிபாட்டையும் தட்சிணாமூர்த்தி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். வெற்றி வாய்ப்புகள் விரைவில் வந்து சேரும்.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!

சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி குழப்பங்களை அகற்றும் பெயர்ச்சியாகவே அமைகிறது. மாக்கோலம் போடும் மங்கையர்கள் இனி மணக்கோலம் காண வழி பிறக்கும். குடங்களைச் சுமக்கும் பெண்கள் இனி மகுடங்களைச் சுமக்க வழி பிறக்கும். சேமிப்பு உயரும். செல்வாக்கு மேலோங்கும். சாமி துணையோடு சகல காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். காண்பவர்கள் வியக்கும் விதம் ஒற்றுமை பலப்படும். குருவின் வக்ர காலத்தில் உடல் நலத்தில் கவனம் தேவை. உற்றார், உறவினர்களோடு சற்று உரசல்கள் ஏற்படலாம். அலைச்சலும் மன அழுத்தமும் ஏற்படும். இதுபோன்ற காலத்தில் சுயஜாதகத்தை அலசிப் பார்த்து எந்த தெய்வத்தை வழிபாட்டால் இனிய வாழ்க்கை அமையுமோ, அந்த தெய்வத்தை வழிபடுவது நல்லது. சர்ப்ப சாந்தி செய்வதன் மூலம் சந்தோஷத்தைப்பெற இயலும்.

**ஜோதிடக் கலைமணி**
**சிவல்புரி சிங்காரம்**

தொடரும்

## நீங்கள் எதிர்பார்த்திருந்த நல்ல மாற்றங்கள் வந்துசேரப்போகிறது



**28.05.2013 - 12.06.2014**

| | | | |
|---|---|---|---|
| | கேது | செவ்வாய் சூரியன் சுக்ரன் | புதன் வியாழன் |
| | குருப் பெயர்ச்சி 28.5.2013 | | |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | |

**சுபஸ்ரீவிஜயவருடம்வைகாசி மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (28.05.2013) இரவு 9.18 மணிக்கு மிருகசீரிட நட்சத்திரம் மூன்றாம் பாதத் தில் மிதுன இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கப் போகிறார்.**

**குருவின் வக்ர காலம் 13.11.2013 முதல் 12.03. 2014 வரை வியாழன் வக்ர கதியில் இருக்கிறார்.**

**01.06.2013 முதல் 01.07 2013 வரை குரு அஸ்தமனம் பெறுகிறார்.**

**பிறகு 13.06.2014இற்கு கடகத்தில் குரு உச்சம் பெற்று சஞ்சரித்து உன்னத பலன்களை உலகிற்கு வாரிவழங்கப் போகிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான சக்திகளின் கையில்....!

பொதுவாக தேர்தல் ஒன்றுதான் பல்வேறு கட்சியையும் ஒன்றிணைய வைத்து கூட்டணிகளை அமைப்பதற்குக் காரணமாக அமைகிறது. அதேவேளை ஏற்கனவே இருக்கும் கூட்டணிகளை உடைத்துப் போடவும் தேர்தல்களே காரணமாகி விடுகின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இந்த தேர்தல் காலக் கூட்டணிக் குழப்பங்களில் இருந்து தப்பிவிட முடியாது என்பதை அண்மைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தியாவில் காலத்துக்குக் காலம் கூட்டணிகள் மாறுகின்றன. அதில் இடம்பெறும் கட்சிகள் மாறுகின்றன. அதுபோன்று இலங்கையிலும் முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா போன்ற கட்சிகள் அவ்வப்போது சந்தர்ப்பத்துக்கேற்றவாறு அணி மாறுவதுண்டு. பெரும்பாலும் ஏனைய கட்சிகள் அவ்வாறு அணி மாறுவது குறைவு. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உருவாகத் தொடங்கியுள்ள புகைச்சல், வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிறுத்தியே எழுகிறது என்பதில் சந்தேகமில்லை.

கடந்த மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் நடந்த தந்தை செல்வா நினைவுப் பேருரையின், போது உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், கூட்டமைப்புக்குள் கொள்கை ரீதியான எந்தக் குழப்பமும் இல்லை என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், கூட்டமைப்புக்குள் வேறு சிக்கல்கள் இருப்பதை அவர் நிராகரிக்கவில்லை. அதுபோலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதல்வர் பதவிக்கு நிறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனும் தமிழ்க் கட்சியின் ஒற்றுமையை வலியுறுத்தியிருந்தார். இவர்கள் இருவரினதும் கருத்துக்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினுள் இருக்கும் முரண்பாடுகளை வெளிப்படுத்திய அதேவேளை, கடந்தவாரம் திருகோணமலையில் ரெலோவின் மத்திய குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இந்த பிரச்சினை தீவிர கட்டத்தை எட்டியுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்து கொள்ள தமிழரசுக் கட்சி முன்வராது போனால் ஏனைய நான்கு கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதவு செய்து கொள்வது என்றும் அதற்கு தமிழரசுக் கட்சிக்கு இரண்டு வாரகால அவகாசம் வழங்கப்படும் என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. கிட்டத்தட்ட தமிழரசுக் கட்சியை எச்சரிக்கும் வகையில்தான் இந்தத் தீர்மானம் ரெலோவின் மத்திய குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்து கொள்வது குறித்த சர்ச்சை பல காலமாகவே நீடித்து வருகிறது. விடுதலைப்புலிகள் இருந்தவரை இத்தகையதொரு பதிவு எந்தக் கட்சிக்குமே தேவைப்பட்டிருக்கவில்லை. விடுதலைப்புலிகளின் அழிவுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு ஒரு பதிவு அவசியம் என்ற கருத்து ஏற்படத் தொடங்கியது. தமிழரசுக்கட்சி அதற்கு தயங்கிய அதே வேளை, தமது கட்சியை அமைப்பு ரீதியாகவும் வலுப்படுத்தி வந்தது. இது ஏனைய கட்சிகளுக்கு சற்று கலக்கத்தை ஏற்படுத்தியது உண்மை. அதுபோலவே வெளிநாட்டுப் பயணங்கள், சந்திப்புக்கள், பேச்சுக்களில் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கமே அதிகம் இருந்ததும் ஒரு பிரச்சினையாக சுட்டிக்காட்டப்பட்டது. இந்த அரசியல் கட்சிப் பதிவு விவகாரம் ஒரு நீண்ட கால இழுபறியாகவே இருக்கிறது.

ஒருகட்டத்தில் அரசியல் கட்சியாகப் பதவி செய்து கொள்வதற்கான விண்ணப்பம் கூட, தேர்தல் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் மத்திய குழுவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற காரணத்தினால் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் வரும் செப்ரம்பரில் நடத்தப் படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துக்கொண்டிருக்கையில் இந்த விவகாரம் மீண்டும் சூடுபிடித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் மத்தியில் கொள்கை வேறுபாடு ஏற்பட்டு, இத்தகையதொரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தால், அதனைத் தவிர்க்க முடியாத விடயமாக கருதலாம். ஆனால், கொள்கை ரீதியாக ஒன்றுபட்டு நிற்கும் கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நிலைத்து நிற்க முடியாமல் தடுமாறுகின்றன என்பது, நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டிய




தவறு. அதுவும் தமிழர்கள் முக்கியமான தருணமொன்றில் நிற்கின்ற நிலையில் இந்த நெருக்கடியும் கால அவகாசமும் தமிழ் மக்களை அச்சம் கொள்ள வைத்துள்ளன.

வடக்கு மாகாணசபையில் எப்படியும் இலங்கை சுதந்திர கட்சியை ஆட்சியில் அமர்த்துவதற்கு அரசாங்கம் கங்கணம் கட்டிக்கொண்டிருக்க, தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளோ, தம்மைத் தாமே பலவீனப்படுத்திக்கொள்கின்றனவே என்றே சிந்திக்கத் தோன்றுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி சுமுகமாகத் தீர்க்கப்பட்டேயாக வேண்டும் என்பதுதான் தமிழர் தரப்பின் ஒரே எதிர்பார்ப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய கட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பம் ஒன்றுமில்லை என்ற தமிழரசுக்கட்சியின் வாதத்தையோ அல்லது கால அவகாசம் கொடுக்கும் ஏனைய கட்சிகளின் எச்சரிக்கையையோ தமிழ் மக்கள் ஒன்றும் நேர்மையானதாகவோ கண்ணியமானதாகவோ கருதியிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை ஒருதளமாக முன்வைத்தே தமிழரின் தேசிய அரசியல் பலத்தைக் கட்டியெழுப்பலாம் என்ற கனவு தமிழர்களிடம் உள்ளது. அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்களின் ஆதரவு தொடர்ந்து கிடைத்துவருகிறது. இத்தகைய பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கும் எந்த முயற்சியையும் தமிழ் மக்கள் விரும்பவோ அதற்கான முயற்சிகளை ரசிக்கவோ மாட்டார்கள்.

தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினைக்கு- உரிமைப் போராட்டத்துக்கும் உரிய தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு முன்னதாகவே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை உடைப்பதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சிகளுக்கும் தமிழ் மக்களின் ஆதரவு இருக்காது. தமிழ் மக்களின் நலன் குறித்தே சிந்திக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்குள் கொள்கை ரீதியான முரண்பாடுகள் இல்லாத நிலையில், அதனை உடைக்க மேற்கொள்ளப்படும் எத்தகைய முயற்சிகளும் தன்னலம் மிக்க செயற்பாடாகவே கருதப்படும். இந்த நேரத்தில் தமிழர் தரப்பிடம் தேவைப்படுவது ஒற்றுமை ஒன்றுதான். அதற்கு யார் குறுக்கேயிருந்தாலும் அவர்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இருந்து தனியாகப் பிரிந்து போன எந்தக் கட்சியையும் தமிழ் மக்கள் தேர்தல்களில் ஆதரிக்கவில்லை என்பது வரலாறு. கடந்த காலங்களில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும், தமிழ்க் காங்கிரசுக்கும் அதுவே நடந்தது. இந்தக் கட்டத்தில், ஏனைய நான்கு கட்சிகளை ஓரம் கட்டிவிட்டு தமிழரசுக்கட்சியை முன்னிலைப்படுத்தினாலோ, அல்லது ஏனைய நான்கு கட்சிகளும் சேர்ந்து தமிழரசுக் கட்சியை ஓரம் கட்டினாலோ, நெருக்கடிக்குள் சிக்கிக்கொள்ளப் போவது தமிழ்த் தேசிய அரசியல்தான். வடக்கு மாகாணசபைத் தேர்தலில் ஒற்றுமை சீர்குலைந்தால் யாரைத் தெரிவு செய்வது என்ற குழப்பம் தமிழ் மக்களிடம் ஏற்படும்: அது தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான சக்திகளின் கையில் வடக்கு மாகாண நிர்வாகத்தைக்கொண்டு சேர்த்துவிடவும் வாய்ப்புகள் உள்ளன. அத்தகையதொரு வரலாற்றுத் தவறு இடம் பெறாமல் உறுதி செய்ய வேண்டிய கடமை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலுள்ள அத்தனை கட்சிகளுக்கும் உள்ளது.

ஒவ்வொரு கட்சியும் நியாயமாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்வதன் மூலமே இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணமுடியும். அதே வேளை, வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் குழப்பங்களை உருவாக்கி விடுவதற்கு அரசாங்கம் தன்னாலான பங்களிப்பை செய்யவும் தயங்காது. அத்துடன், தமிழர் பிரச்சினை குறித்து இலங்கை அரசாங்கம் பேசவேண்டிய தரப்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை முன்மொழியும் வெளிநாடுகளும் இந்தக் குழப்பங்களை விரும்பப்போவதும் இல்லை. இந்தக் குழப்பங்களுக்கு எல்லாத் தரப்பும் இணைந்து ஒரு முடிவு காணாவிட்டால், தமிழர்களின் அரசியல் பலம் சிதைந்து போவதையோ, வெளியுலக ஆதரவு இழக்கப்படுவதையோ தடுக்க முடியாது போகும்.

-இன்போத் தமிழ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் உள்ள காணிகளை சிங்கள மக்கள் கோர வேண்டும்

## காத்திருக்கிறாராம் காணி அமைச்சர்

(கொழும்பு)

வடக்கில் வாழ்ந்த சிங்களவர்கள் தமது காணிகளை மீளக் கோரவில்லை என காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக் கோன் தெரிவித்துள்ளார்.

போருக்கு முன்னர் வடக்கில் தங்கியிருந்த சிங்கள மக்களுக்கு அவர்களது காணிகளை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த சிக்கலுக்குக் காரணம் அவர்கள் காணிகளை மீளக் கோராமையே யாகும்.

காணிகளை மீள வழங்குமாறு சிங்களவர்கள் உத்தியோக பூர்வமாக கோரவில்லை. யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கின் பல பகுதிகளில் வாழ்ந்து வந்த சிங்களவர்கள் புலிகளால் விரப்பட்டனர்.

காணிகளை மீளக் கோரும் வரையில் காணி அமைச்சு காத்திருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் 54 நாடுகள் பங்கேற்கும்

இலங்கைக்கு 54 நாடுகளின் தலைவர்கள் விஜயம் செய்யவுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்த அரச தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

பிரிட்டனின் இளவரசர் சார்ல்ஸ் மற்றும் பிரதமர் டேவிட் கமரூனின் இலங்கை விஜயத்தை தடை செய்ய தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் கடும் முயற்சி எடுத்து வருவதாக அவ்வூடகம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# கொலன்னாவைக்கு மீண்டும் துமிந்த

(கொழும்பு)

அரசியல் நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக விலகியிருக்கவுள்ளதாக ஹிருணிகா பிரேமசந்திர அறிவித்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரதலஷ்மன் பிரேமசந்திரவின் மகளான ஹிருணிகா தமது முழுநேர அரசியல் பிரவேசத்துக்கு உரிய உதவிகள் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தாம்சட்டப்பரீட்சைக்கு தயாராகவுள்ளமை காரணமாகவே அரசியல் நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஷமன் பிரேமசந்திரவின் கொலையில் சந்தேக நபராக குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, மீண்டும் கொல ன்னாவைத் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டுக்கு 6ஆயிரம் தங்கும் அறைகள்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டுக்காக அரசாங்கம் 6 ஆயிரம் தங்கும் அறைகளை முன்கூட்டியே ஒதுக்கியுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்பதற்கு வருகை தரவுள்ள தலைவர்களுக்கு கொழும்பு மற்றும் அதன் பெரும்பாக பகுதிகளில் தங்குமிட அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மாநாடு கொழும்பில் நடைபெறும் நிலையில் துணை நிகழ்வுகள் அம்பாந்தோட்டையிலும் தம்புள்ளையிலும் இடம்பெறவுள்ளன.

இந்த நிலையில் மாநாடு தொடர்பில் குறைந்த செலவில் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அரசாங்கத்தை கவிழ்க்க வியூகம் வகுக்கிறதாம் ஐ.தே.க

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி புதிய வியூகம் ஒன்றை அமைத்துள்ளது.

வாக்களிப்பு நிலையங்களின் அடிப்படையில் மக்கள் அமைப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன. இந்த மக்கள் அமைப்புக்கள் விரோதமான கருத்துக்களை பிரசாரம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜூன் மாதமளவில் குறித்த மக்கள் அமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்கக் கூடிய ஓர் சக்தியாக இந்த மக்கள் அமைப்பு உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடை செய்ய முடியாது என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)




- ❖ 1619 - டச்சு அரசியல்வாதி ஜொகான் வன் ஓல்டென்பார்னவெல்ட் ஹேக் நகரில் நாட்டுத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் தூக்கிலிடப்பட்டார்.
- ❖ 1648 - டில்லியில் செங்கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.
- ❖ 1765-யாழ்ப்பாணத்தின் டச்சுத் தளபதியாக அந்தனி மூயார்ட் நியமிக்கப்பட்டான்.
- ❖ 1787-அவுஸ்திரேலியாவில் குடியேற்றத்தை ஆரம்பிப்பதற்கென 11 கப்பல்களில் 772 சிறைக்கைதிகளையும் குற்றவாளிகளையும் ஏற்றிக் கொண்டு கப்டன் ஆர்தர் பிலிப் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டார்.
- ❖ 1830-ஈக்வடோர் விடுதலை அடைந்தது.
- ❖ 1846 - ஐக்கிய அமெரிக்கா மெக்சிக்கோ மீது போரை அறிவித்தது.
- ❖ 1861-பெரும் வால்வெள்ளி ஒன்று அவுஸ்தி ரேலியாவில் அவதானிக்கப்பட்டது.
- ❖ 1880 - நியூ ஜேர்சியில் மென்லோ பூங்காவில் எடிசன் மின்சாரத்தில் இயங்கும் தனது முதலாவது தொடரூந்தை சோதித்தார்.
- ❖ 1888 - பிரேசில் அடிமைமுறையை இல்லாதொழித்தது.
- ❖ 1913-நான்கு இயந்திரங்களினால் ஆன முதலாவது விமானத்தை ஈகர் சிபோர்ஸ்கி என்ற ரஷ்யர் இயக்கினார்.
- ❖ 1940 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தினுள் நாசி ஜேர்மனியர் புகுந்ததை அடுத்து அதன் அரசி வில்ஹெல்மேனியா பிரித்தானியாவுக்கும் இளவரசி ஜூலியானா தனது குழந்தைகளுடன் கனடாவுக்கும் தப்பி ஓடினர்.
- ❖ 1943 -இரண்டாம் உலகப் போர்: வட ஆபிரிக்காவில் ஜேர்மனிய மற்றும் இத்தாலியப் படையினர் கூட்டுப் படைகளிடம் சரணடைந்தனர்.
- ❖ 1952-இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையின் முதலாவது அமர்வு இடம் பெற்றது.
- ❖ 1954 - சிங்கப்பூரில் தேசியத்துக்கு எதிராக சீனப் பாடசாலை மாணவர்களின் போராட்டம் இடம்பெற்றது.
- ❖ 1960 - உலகின் ஏழாவது உயர மலையான தவுளகிரியின் உச்சியை சுவிட்சர்லாந்து மலையேறிகள் இருவர் முதன் முதலில் அடைந்தனர்.
- ❖ 1967 - சாகிர் உசேன் இந்தியாவின் முதலாவது முஸ்லிம் குடியரசுத் தலைவர் ஆனார்.
- ❖ 1969 - மலேசியாவில் கோலாலம்பூரில் சீனர்களுக்கும் மலே இனத்தவர்களுக்கும் இடையில் இனக்கலவரம் மூண்டது. 190 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1981 - ரோமில் திருத்தந்தை இரண்டாவது ஜோன் போலைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.
- ❖ 1989 - சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.
- ❖ 1996 - வங்காள தேசத்தில் வீசிய கடும் புயலில் சிக்கி 600 பேர் வரையில் இறந்தனர்.
- ❖ 1998 - இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் சீனர்களுக்கெதிராக இனக்கலவரம் ஆரம்பமானது.
- ❖ 1998-இந்தியா மேலும் இரண்டு அணுகுண்டுச் சோதனைகளை மேற்கொண்டது. இந்தியா மீது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் பொருளாதாரத் தடையைக் கொண்டுவந்தன.
- ❖ 2005 - உஸ்பெக்கிஸ்தானில் அண்டிஜான் என்ற இடத்தில் பொலிஸார் போராட்டக் காரர் மீது சுட்டதில் 187 பேர் உயிரிழந்தனர்.
- ❖ 2006 - தி.மு.க தலைவர் மு. கருணாநிதி 5 ஆவது முறையாக தமிழக முதல்வர் பதவியை ஏற்றார்.


பிறப்புக்கள்

- ❖ 1882-ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர் (இ. 1963)
- ❖ 1905 -பக்ருதின் அலி அகமது, இந்தியக் குடியரசுத் தல்லவர், (இ. 1977)
- ❖ 1918 - பாலசரஸ்வதி, பரத நாட்டிய மேதை (இ. 1984)
- ❖ 1956 - ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், இந்திய குரு
- ❖ 1978 - மைக் பிபி, அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்

இறப்புகள்

- ❖ 1898 - பி. ஆர். ராஜமய்யர், தமிழ் எழுத்தாளர் (பி. 1872)
- ❖ 1978 - வி. தெட்சணாமூர்த்தி, தவில் மேதை (பி. 1933)
- ❖ 2001-ஆர். கே. நாராயண், இந்திய நாவலாசிரியர் (பி. 1906)

### ஆர்.கே நாராயண்



ராசிபுரம் கிருஷ்ணசுவாமி நாராயண் 1906 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி பிறந்தார். ஆங்கிலத்தில் எழுதிய ஓர் இந்திய நாவல் ஆசிரியர் ஆவார். இவரின் உணர்ச்சி பூர்வமான நாவல்கள் 20 ஆம் நூற்றாண்டு இந்தியரின் வாழ்க்கையைப் பிரதி பலிக்கும் மால் குடி என்னும் கற்பனைக் கிராமத்தைத் தழுவி எழுதப்பட்டவையாகும். முல்க்ராஜ் ஆனந்த் மற்றும் ராஜாராவ் ஆகியோருடன் இவர் 20 ஆம் நூற்றாண்டின் மூன்று சிறந்த இந்திய -ஆங்கில மொழி எழுத்தாளர்களில் ஒருவராக கணிக்கப்பட்டார்.

இவரது படைப்புகள் எளிய நடையும் இழைந்தோடும் நகைச்சுவை உணர்வும் கொண்டவை இவரது கதாபாத்திரங்கள் யாவும் சிற்றூர்களைச் சார்ந்தவை. சுவாமியும் நண்பர்களும் என்பதிலிருந்தே அவரது எழுத்தாக்கங்கள் ஆரம்பித்தன.

தொடர்ச்சியாக மால்குடி என்னும் கற்பனைக் கிராமத்தைப் பின்பற்றி பல நாவல்களைப்பிரசுரித்தார். சில நாவல்கள் இவரது சுயசரிதையைப் பின்பற்றியவை. உதாரணமாக ஆங்கில ஆசிரியர் (the english teacher) என்னும் நாவல் இவரது இளம் மனைவியின் மரணத்தை தழுவியெழுதப்பட்டதாகும். நாராயணின் ஆக்கங்கள் ஒவ்வொரு நாளும் சமுதாயத்தில் நடைபெறுவதைத் தழுவியதாகும். இவர் இந்துபுராண கதைகளையும் நாட்டுப்புறக்கதைகளையும் கூறத்தயங்கவில்லை. இவரது இத்தன்மையானது விமர்சிக்கப்பட்ட போதும் சிறந்த ஓர் எழுத்தாளராகவே கருதப்பட்டார். இவர் 2001 ஆண்டு மே 13 ஆம் திகதி உயிர் நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளன் கடற்கரையோர மீனவர்கள் படும் அவலம்

## அமைச்சர் ராஜிதவிடம் சுட்டிக்காட்டினார் வினோ எம்.பி

(குருமன்காடு)

**மாத்தளன் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் கடலட்டை பிடிக்கும் 200 வரையான தென் பகுதி மீனவர்களை வெளியேற்ற உத்தரவிடுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கம் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கோரிக்கை விடுத்துள் ளார். கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் தலைமையில் நடைபெற்ற கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.**

கடந்த 2 வாரங்களுக்கு மேலாக 50 படகுகளில் சுமார் 200 வரையான தென் பகுதி மீனவர்கள் சட்டத்துக்குப் புறம்பான வகைகளில் கடலட்டைத் தொழிலில் ஈடுபட்டுவரு கின்றனர். மாத்தளன் பிரதேச மீனவர்கள் யுத்தத்தால் இடம் பெயர்ந்து, சொந்த இடங் களில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு மீன்பிடி உபகரணங்கள் எதுவும் இல்லாத நிலையில், தென் பகுதி மீனவர்கள் நவீன இயந்திரங்கள் மூலம் கடல் வளங்களை அள்ளிச் செல்கின்றனர்.

கடலுக்கடியிலான சட்டவிரோதமாக வெளிச்சம் பாய்ச்சி, கடலட்டை தொழிலில் ஈடுபடுவதால் உள்ளூர் மீனவர்கள் நாளாந்தம் வெறும் கையுடனேயே கரைக்கு திரும்புகின்றனர்.

இவ்வாறான செயற்பாட்டுக்கு அங்குள்ள பாதுகாப்புத் தரப்பினரே தென்பகுதி மீனவர்களுக்கு அனுமதி அளித்துள்ளனர். உள்ளூர் மீனவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள போதிலும், பாதுகாப்பு படையினர் அவர்களுக்குக் கொடுக்கும் அச்சுறுத்தல் காரணமாக அம் மீனவர்கள் எதுவுமே செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.

மீறி வீதியில் இறங்கி போராட முனைவோர் தடுப்பு முகாமுக்குச் செல்ல வேண்டி ஏற்படும் என படையினர் மிரட்டுகின்றனர்.

எனவே, இந்த இரு பகுதியினருக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படாது, அமைச்சர் தலையிட்டு உடனடியாக அவர்களை வெளியேற்ற வேண்டும் எனவும் வினோநோதராதலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ராஜித, வேற்றிட மீனவர்களுக்கு அனுமதி வழங்கும் பொறுப்பு இராணுவத்துக்கு இல்லை எனவும் 1988 ஆம் ஆண்டுக்கு முன்பு தொழில் செய்த பெரும்பான்மை இனத்தவர்களுக்கு மட்டுமே அனுமதி கொடுத்திருந்ததாகவும் ஏனையவர்களுக்கு தமது அமைச்சு அனுமதி வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் விரைவில் நேரில் சமுகம் தந்து மீனவப் பிரதிநிதிகளுடனும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் ஆராய்ந்து பலாத்காரமாக தொழிலில் ஈடுபடுவோரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் மீனவர்களுக்கான எரிபொருள் மானியம் குறைக்கப்பட்டது சம்பந்தமாக அமைச்சரிடம் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் சுட்டிக்காட்டிய போது, தாம் எதுவித மானியக் குறைப்புக்கும் உத்தரவிடவில்லை என்றும் தொழிலில் ஈடுபடாத படகுகள் வெளி இணைப்பு இயந்திரங்கள் சம்பந்தமாக அறிக்கை கோரியிருந்ததாகவும் இரட்டைப் பதிவுகள் மூலம் சில மீனவர்கள் எரிபொருள் மானிய மோசடியில் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ளார். (அ-250)

# சுதேச வைத்தியத் துறை அமைச்சின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வணிகர் கழகத்தின் அனுசரணையுடன் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் சுதேச வைத்தியத் துறை அமைச்சும் இணைந்து நடத்தும் ஆயுர்வேத எக்ஸ்போ-2013 கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் என்பன நடைபெறவுள்ளன.

இக் கருத்தரங்குகள், கண்காட்சிகள் என்பன எதிர் வரும் ஜூலை மாதம் 12, 13 ,14 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தேசிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதென வடமாகாண சுதேச மருந்து திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி. திருமதி சி. துரைரட்ணம் அறிவித்துள்ளார். (அ-5)

# மின்சார கட்டண உயர்வை கண்டித்து போராட ஏற்பாடு

மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் 600 தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இச் சங்க இணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அரச, தனியார் மற்றும் பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த 600 தொழிற் சங்கங்கள் போராட்டத்தில் குதிக்கவுள்ளன. போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு மேற்படி தொழிற்சங்கங்கள் இணக்கம் வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்கும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவளித்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியும் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இடது சாரி கட்சிகளுடனும் தொழிற்சங்கப் போராட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. (அ-2)

# நடைமுறைக்கு வருகிறது இலத்திரனியல் பருவச் சீட்டு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் பாடசாலை பயணங்களுக்காக இதுவரை பயன்படுத்திய கார்போட் மாதாந்த பருவச்சீட்டுக்குப் பதிலாக 3 இலட்சம் இலத்திரனியல் பத்திரங்களை இலவசமாக வழங்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரயாணத்துக்கான கட்டணம் பேருந்து நடத்துநரால் இலத்திரனியல் இயந்திரத்தால் அறவிடும் முறை அமுலாகுமென போக்குவரத்துச் சபையின் உபதலைவர் எல்.ஏ.விமலரத்ன தெரிவித்தார்.

வெளிப்படையாக தெரியாத போதும், உட்பகுதியில் பிள்ளையின் பெயர், வயது, பிரயாணப் பாதை போன்ற தகவல்கள் இதில் இடம் பெறும். இதை வேறு எவருக்கும் கைமாற்ற முடியாது அத்துடன், இலத்திரனியல் பத்திரம் காணமாற் போனால் 200 ரூபா செலுத்தி அப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அப் பத்திரத்தில் பணம் முடிந்தால் தொலை பேசிகளைப் போன்று பிள்ளைகளே ரீலோட் செய்து கொள்ளலாம். எதிர்வரும் காலத்தில் இலத்திரனியல் பத்திரத்துக்காக புகைப்படமும் சேர்க்கப்படுமென்று உபதலைவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக பொரளை ரத்னாவலி மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த 98 பேருக்கு இலத்திரனியல் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதெனஅவர் குறிப்பிட்டார். (அ-2)




# எமது கிராமத்தையும் கவனத்தில் எடுங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் 2010 இல் மீள் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நகரத்துக்கு அண்மித்த குறிப்பிடத்தக்கதான கிராமங்கள் முன்னேறிவிட்டன. ஆனால் நகரில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்துள் அமைந்துள்ள உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் கிராமங்கள் அபிவிருத்தியில் பின் தங்கியுள்ளன.

தொலைத் தொடர்புகளில் தன் நிறைவு பெற்றுள்ளதாக பேசப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில் எமது இருகிராமங்களில் மட்டும் டயலொக் , மொபிற்றல் உட்பட ஏனைய சிம் காட்களுக்கும் கவரேஜ் இல்லாத தன்மையே காணப்படுவதால் எந்தவிதமான தொலைத் தொடர்புகளையும் ஏற்படுத்தமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

அடுத்து புராதன காலத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு தற்போது மின் ஒளி கிடைக் கின்றது. ஆனால் குறித்த எமது இரு கிராமங்களுக்கும் யுத்தத்தின் முன் மின் ஒளி இருந்தும் கூட, இன்றுவரை மின்சாரம் இல்லாது இருள்மூடிய கிராமங்களாக காட்சியளிக்கின்றன.

உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் தெற்கு பக்கத்தில் உள்ள ஒரு சில வீதிகளுக்கு இடையிடையே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் உருத்திரபுரம் நகர் பகுதி அண்டிய பகுதிகளுக்கும் சிவநகர் பகுதிக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. உருத்திரபுரத்தில் அமைந்துள்ள புராதன ஆலயமான சிவன்கோவில் கூட ஒளி பெறாத நிலையில் உள்ளது.

அண்மையில் உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மத்தி ஆகிய கிராமங்களுக்கு மின் சாரம் வழங்கப்பட்டபோதும், உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் கிராமங்கள் கைவிடப்பட்டுள்ளன.

கரடிப்போக்கு உருத்திரபுரம் பிரதான வீதி வெகுவாக சீரழிந்து துவிச்சக்கரவண்டிகள் கூட பயணம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. தற்போது அவ்வீதியால் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்து போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் உள்ளது.

உருத்திரபுரம் மேற்கு கிராமத்தின் உள்வீதிகள் யாவும் வாய்க்கால்கள் ஆக மாறி மழைகாலத்தில் நீர்பாய்ந்தோடும் பாதையாக உள்ளன. குடியேற்ற காலத்தின் பின் உள் வீதிகள், ஒழுங்கைகள் ஒருசில மட்டும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்த வகையில் எமது கிராமங்கள் மட்டும் தொலைத்தொடர்பிலும் மின் இணைப்பிலும் புறக்கணிக்கப்படுவது ஏன்? என இக் கிராமங் களின் மக்களாகிய நாம் வினவுகின்றோம். இதில் சம்பந்தப்பட்டவர்கள் இனியா வது எமது பிரச்சினைகளைக் கருத்தில் எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். கவனிப் பார்கள் என ஏங்குகின்றோம். -பாதிக்கப்பட்ட மக்கள்-

# பேசும் படம்

இப்படியும் ஒரு விபத்து பாருங்கள் ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடிக்க அனுமதியில்லை அவலத்தில் மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

பெருங்கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கும் கடற்படையினர், அப்பிரதேசத்தைச் சார்ந்த தமக்கு தடை விதித்து வருவதாகவும் இதனால் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள முடியாத நிலையில் பிள்ளைகளோடு அவலப்பட்டு வருவதாகவும் விசுவமடு கண்ணகி நகர்ப் பகுதியிலுள்ள மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யுத்தத்திற்குப் பின்பு கடந்த 2010 ஆம் ஆண்டு குடியேற அனுமதிக்கப்பட்ட எமக்கு வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழிலை மேற்கொள்ள மீன்பிடி வலைகள் மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசுவமடு கண்ணகி நகர்ப் பகுதி மீனவர் சங்கப்பிரதிநிதியான வே. செல்லத்தம்பி என்பவர் தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் நாம் வந்து குடியேறியிருந்தோம். தற்போது கண்ணகி நகரப் பகுதியில் சுமார் 364 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் 265 குடும்பங்கள் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் அதேவேளை கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு இந்தக் கிராம மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் சுண்டிக்குளம் கடற்கரையை அண்டிய சிறியளவு கடற்பரப்பிலேயே (இறால் பிடிக்க) தொழில் செய்ய எமக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர போதியளவு கடற்றொழில் உபகரணங்கள் இல்லாமையினால் வாடகைக்கு கடற்றொழில் கலங்களைப் பெற்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

மேலும் இரணைமடுக்குள நீர் தற்போது திறந்து விடப்பட்டுள்ளமையால் கடல் நீரேரியின் நீர் மட்டம் உயர்வடைந்து எமது தொழில் பாதிப்படைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறிய போதிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

அத்தோடு கண்ணகி நகர் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து உதவிகள் செய்ய முன்வர வேண்டுமெனவும் மிகவும் கவலையுடன் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை, சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபடும் மீனவர் சிலர் தமது நிலை குறித்து கூறும் போது, ஆனையிறவு கல்லாறு கடற்பிர தேசத்தில் தென்னிலங்கை மீனவர்கள் கடற்படையினரின் அனுமதியுடன் வந்து மீன் பிடித்து விட்டு செல்கின்றனர். ஆனால், எமக்கோ அங்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அத்தோடு அனுமதி வழங்கப்பட்ட கடற்கரைப்பகுதியில் உரிய முறையில் தொழில் செய்ய கடற்றொழில் உபகரணங்களும் இல்லை. பிடிபடும் இறால்களை சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்புக்களும் இல்லை என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-6)

## உதைபந்தில் வெற்றி

(றெட்பானா)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகளில் மு/பாரதி வித்தியாலயம் முதல் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இதில் 15 ,17 ,19 வயது ஆகிய பிரிவுகளில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்ட பாடசாலையாக மு/ பாரதி வித்தியாலயம் திகழ்கின்றது.

இப் போட்டிகளில் பங்கு பற்றிய பல உயர்தர பாடசாலைகளை வென்று மூன்று பிரிவுகளிலும் முதல் இடத்தைப் இப்பாடசாலை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-260)

## கற்பக விநாயகர் மஹோற்சவம்

கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. மஹோற்சவத்தின் 7 ஆம் நாளான ஜூன் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் 9 ஆம் நாளான ஜூன் மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

## விற்பனை நிலையங்கள் மீது கழிவு ஒயில் வீச்சு

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தியிலுள்ள இலத்திரனியல் மற்றும் தொலைபேசி விற்பனை நிலையமொன்றுக்கு இனந்தெரியாத நபர்களால் கழிவொயில் வீசப்பட்டுள்ளது.

இக் கழிவொயில் வீச்சு சம்பவம் நேற்று முன்தினம் இரவு வேளை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தால் குறித்த கடையில் பொருளாதார இழப்புக்கள் எவையும் ஏற்படவில்லை என்றும் கதவின் முன்புறமாக ஒயில் வீசப்பட்டுள்ளதால் கடையின் முகப்பு பகுதி மட்டும் அழுக்கடைந்து காணப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

கழிவொயில் வீச்சுக்கான காரணம் நேற்று வரை அறியப்படவில்லை எனவும் கழிவொயில் வீசியவர்கள் அடையாளங்காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

## காணிப் பதிவுக்கான பகுதி நாள் கூட்டங்கள்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள காணி பிணக்குகள், காணிகளைப் பதிவு செய்தல் தொடர்பான பகுதி நாள் கூட்டங்கள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

2013-I சுற்று நிருபத்திற்கு அமைய சிவநகர், மலையாளபுரம், விவேகானந்தநகர் ஆகிய கிராமங்களில் காணிப் பகுதிநாள் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

இதன் தொடர்ச்சியாக நாளை செவ்வாய்க்கிழமை பாரதிபுரத்திலும் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை உதய நகரிலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜெயந்தி நகரிலும் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை ஸ்கந்தபுரத்திலும் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கணேசபுரத்திலும் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை மாயவனூரிலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருவையாறு முதலாம் பகுதியிலும் எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை ஆனந்தபுரத்திலும் நடைபெறவுள்ளன.

இப்பகுதி நாள் கூட்டத்தில் அந்தந்த கிராம மக்கள் பங்குபற்றி பயன் பெறுமாறு கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் கேட்டுள்ளார். (அ-3-254)

## கிளி.இல் பிரமாண்டமான வெசாக் கொண்டாட்டங்கள்

கிளிநொச்சியில் எதிர்வரும் 24 ஆம் திகதி மிகப் பிரமாண்டமான அளவில் வெசாக் தினக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கு படையினர் ஏற்பாடுகளைச் செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மௌரியப் பேரரசனான அசோகனின் மூத்த மகனான மகிந்த தேரர் 2ஆயிரத்து 319 ஆண்டுகளுக்கு முன்னர் கிளிநொச்சிக்கு வந்ததாகவும் அதனை நினைவு கூறும் வகையில் இந்த ஆண்டு பெருமெடுப்பில் கொண்டாட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கிளிநொச்சியில் பிரமாண்டமான வெசாக் பந்தல் மற்றும் அலங்காரங்களை மேற்கொள்வதற்கு படையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவம், விமானப்படை, பொலிஸார் ஆகியோர் இணைந்து கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் பாரிய பந்தலை அமைத்து வருகின்றனர். இம்மைதானத்தில் எதிர் வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை இப்பந்தல் பொது மக்கள் காட்சிக்காக திறக்கப்பட்டிருக்கும்.

அத்துடன் ஏ9 வீதியில் மாங்குளம் சந்தி தொடக்கம் கொக்காவில் வரையான பகுதிகளை பௌத்த கொடிகள், வெசாக் கூடுகள் கொண்டு அலங்கரிக்க படையினர் தயாராகி வருவதாகவும் தெரிய வருகின்றது. (அ-2)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 19 ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையில் 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை எதிர்ப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

19 ஆவது திருத்தத்தின்படி, 17 ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

குறித்த அதிகாரங்கள் நீக்கப்படுவது நியாயமற்ற செயல் என்றும், இது தொடர்பில் அரசாங்கத்துடன் தமது கட்சி பேச்சு வார்த்தை நடத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடவிருப்பதாகவும் ஹசன் அலி கூறியுள்ளார். (அ-2)



வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் தொழில் முயற்சியாளர் மட்டத்தில் சமூக கலந்துரையாடலினை விருத்தி செய்யும் திட்டம் அண்மையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் உரையாற்றுவதையும் வவுனியா மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் பி.நிவேதிகா மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்.பாராளுமன்ற தேர்தலில் பிரதமரானார் நவாஸ் ஷெரிப்


பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று 3ஆவது தடவையாக பிரதமர் பதவியை நவாஸ் ஷெரீப் ஏற்றுள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் 343 உறுப்பினர் இடங்கள் உள்ளன. இவற்றில் 272 தொகுதிகளுக்கும் ,4 சட்ட சபை தொகுதிகளுக்கும் தேர்தல் நேற்றுமுன்தினம் நடந்தது. காலை8 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கி மாலை 6 மணிக்கு முடிந்தது. தேர்தலில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி, முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின் தெஹ்ரிக் இன்சாப் கட்சிக்கு இடையே கடும் போட்டி நிலவியது.

தலிபான் தீவிரவாதிகளின் மிரட்டல், ஆங்காங்கே குண்டுவெடிப்பு நடந்தாலும் மக்கள் ஆர்வத்துடன் வந்து வாக்களித்தனர். இந்தத் தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவாகி இருப்பதாக தேர்தல் ஆணையாளர் பக்ருதீன் இப்ராகிம் தெரிவித்தார்.

கடந்த 1977ஆம் ஆண்டுக்குப் பின் இப்போதுதான் பாக். தேர்தலில் 60 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.

இதில் நவாஸ் ஷெரிப்பின் கட்சி 126 இடங்களுக்கு மேல் முன்னிலை வகிக்கிறது. இம்ரான் கானின் கட்சி 35 இடங்களில் முன்னிலை பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது. அதிக இடங்களில் நவாஸ் கட்சி வெற்றி பெறும் நிலையில் இருப்பதால் அவர் மீண்டும் பிரதமராக பதவியேற்பது உறுதியாகியுள்ளது.



பெரும்பான்மை கிடைக்காவிட்டால், இம்ரான் கட்சியுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்கவும் வாய்ப்பு உள்ளது.

இதேவேளை இந்தியாவுடன் நல்லுறவுக்கு முக்கியத்துவம் அளிப்பேன் என நவாஸ் செரிப் தெரிவித்துள்ளார்.

தனது கட்சி தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் , பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் வெற்றியை பாகிஸ்தான் மக்களுக்கு சமர்ப்பிக்கிறேன் . நம்பிக்கையுடன் எங்களுக்கு வாக்களித்து வெற்றிபெற செய்துள்ளனர். நான் எனது ஆட்சி காலத்தில் இந்தியாவுடனான நல்லுறவுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பேன். மேலும் இப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் வலிமைக்கான புதிய அத்தியாயம் படைப்பேன் என கூறினார்.

இதற்கிடையே தேர்தல் முடிவைத் தொடர்ந்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தொண்டர்கள் நேற்று நள்ளிரவு தங்கள் வெற்றியை கொண்டாடி மகிழ்ந்தனர்.

அப்போது அவர்கள் மத்தியில் நவாஸ் ஷெரிப் பேசுகையில், நமது கட்சி பாராளுமன்றத்தில் தனிப் பெரும் பான்மையுடன் வெற்றி பெற வேண்டும் என பிரார்த்தனை செய்யும்படி தொண்டர்களிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் நவாஸ் ஷெரிப்பின் கட்சிக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. 130 இடங்களே கிடைத்துள்ளன. தனி மெஜாரிட்டிக்கு இன்னும் 7 இட ங்கள் தேவைப்படுகிறது. எனவே சுயேச்சைகள் மற்றும் ஜம்இய்யத் துல் உல மா-இ-இஸ்லாம் போன்ற சிறிய கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)




# நிலக்கரி ஊழல் விவகாரம்;பிரதமரை எதிர்த்து இளைஞர்கள் போராட்டம்

நிலக்கரி ஊழல் சம்பவங்கள் தொடர்பில் பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலகவேண்டுமென கோரி டில்லியில் பா.ஜ.இளைஞர் அணியினர் போராட்டம் நடத்தினர். அவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியுள்ளனர்.

தனியார் நிறுவனங்களுக்கு நிலக்கரி சுரங்கங்களை ஒதுக்கீடு செய்ததில் பெருமளவு முறைகோடுகள் நடந்ததாக மத்திய கணக்கு தணிக்கை அலுவலகம் அறிக்கை தாக்கல் செய்தது. இதையடுத்து இந்த முறை கேடுகள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப் பட்டது. சி.பி.ஐ. தற்போதைய நிலை அறிக்கை நேற்றுமுன்தினம் உச்சநீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு முன்னதாக சி.பி.ஐ. தயாரித்த அறிக்கையை மத்திய சட்ட அமைச்சர் அஸ்வினி குமாரும் பிரதமர் அலுவலக அதி காரிகளும் பார்வையிட்டதாகவும் அதில் திருத்தங்கள் செய்ததாகவும் சமீபத்தில் செய்தி வெளியானது. இந்த விவகாரம் பெரும்பரபரப்பை உருவாக்கியது.

இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. உச்சநீதிமன்றில் பிரமாணப்பத்திரத்தை தாக்கல் செய்தது. இதன் மீது உச்சநீதிமன்றம் விசாரணை நடத்திய போது அறிக்கையை திருத்தியமை தொடர்பாக கண்டனம் தெரிவித்தது.

அறிக்கையை திருத்த யாருக்கும் அதிகாரம் இல்லை என கூறியது. அதனைத் தொடர்ந்து சட்டத்துறை அமைச்சர் பதவியிலிருந்து அஸ்வினி குமார் ராஜினாமா செய்தார். இந்த ஊழல் விவகாரத்தில் பிரதமருக்கு தொடர்பு உள்ளதாக பா.ஜ. குற்றம் சாட்டியது.

பிரதமர் மன்மோகன் சிங்கும் உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியது. இதனையடுத்து பிரதமர் மன்மோகன்சிங்கை உடனடியாக பதவி விலகக்கோரி பா.ஜ.இளைஞர் அணியினர் நேற்றைய தினம் டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்தனா.

*பிரதமர் உருவ பொம்மை எரிப்பு*

இந் நிலையில் நேற்றையதினம்



பிரதமர் வீடு அமைந்துள்ள ரேஸ்கோர்ஸ் பகுதியில் பா.ஜ. இளைஞர் அணியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ. இளைஞர் அணியை சேர்ந்த ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோரை முன் னேறாமல் தடுக்க பொலிஸார் தடுப் புக்களை அமைத்திருந்தனர். ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தடுப் புகளை உடைத்து கொண்டு முன் னேறினர். பிரதமர் மன்மோகன் சிங்கின் உருவ பொம்மையை எரிக் கவும் முயற்சி நடந்தது. இதனை யடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர் களை விரட்ட பொலிஸார் தண்ணீர் பீய்ச்சியடித்தனர். தடியடியும் நடத் தப்பட்டது. இதனையடுத்து அப் பகுதி யில் பா.ஜ. வினருக்கும் பொலிஸா ருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

*பா. ஐ. குற்றசாட்டு*

இதனிடையே டில்லியில் பத்திரிகையாளர்களிடம் பேசிய பா.ஜ. மூத்த தலைவர் வெங்கையா நாயுடு.

ஊழலுக்காக ஊழல்வாதிகளால் நடத்தப்படும் ஆட்சியே ஐ.மு. கூட்டணி என கூறினார். மேலும் அவர் மத்திய அரசைக் கண்டித்து எதிர்வரும் மே 27 முதல் ஜூன் 2ஆம் திகதி வரை சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.


ஊழல் அமைச்சர்களை மத்திய அரசும் காங்கிரஸ் கட்சியும் பாதுகாத்தது. ஐ.மு.கூட்டணியில் பொருளாதார வளர்ச்சி சரிந்தது. கடந்த தே.ஜ. ஆட்சியில் 8.2 சதவீதமாக இருந்த வளர்ச்சி வீதம் ஐ.மு.கூட்டணி ஆட்சியில் 5 சதவீதமாக குறைந்துவிட்டது. ஐ.மு.கூட்டணி மக்கள் விரோத ஆட்சியை நடத்தி வருகிறது. பிரதமர் பதவி விலகும்வரை பா.ஜ. போராடும்.

தற்போதைய ஆட்சியில் நாடு முழுவதும் விவசாயிகளின் தற்கொலைகள் அதிகரித்து விட்டன. பயங்கரவாதம் மற்றும் மாவோயிஸ்ட்களின் வன்முறை அதிகரித்து விட்டது. நிலக்கரியை பூமியிலிருந்து வெட்டி எடுக்கும் முன்னர் ஊழல் நடந்துள்ளது. சட்டபூர்வ அமைப்புகளை பலவீனமாக்க மத்திய அரசு முயற்சி செய்கிறது.

வெளிநாட்டு ஆக்கிரமிப்பைத் தடுக்க முடியாத அரசாக ஐ.மு. உள்ளது. பிரதமர் மன்மோகன் சிங் நாட்டின் சுமையாக மாறிவிட்டார். ஐ.மு.கூட்டணி தீவிர சிகிச்சை பிரிவில் ஜீவமரணப் போராட்டம் நடத்துகிறது. உயிர்காக்கும் கருவிகள் மூலமே மன்மோகன் அரசு தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது என கூறினார். (அ-2)

# மகாத்மா காந்தியின் அடையாளங்கள் ஏலத்தில்

அகிம்சையின் தந்தை மகாத்மா காந்தியின் உயில், கடிதங்கள், இரத்தத்துளி, அவரது கைப்பட நூற்ற



நூலில் இருந்து உருவாக்கப்பட்ட சால்வை, அவரது காலணி ஆகியவை எதிர்வரும் 21ஆம் திகதி லண்டனில் ஏலம் விடப்படவிருக்கிறது.

அத்துடன்,தீயவற்றைப் பேசாதே - பார்க்காதே- கேட்காதே என்ற தத்துவத்தின் அடையாளமாக விளங்கும் 3 குரங்குகளின் நினைவுச் சின்னமும் இந்த ஏலத்தில் இடம் பெறும்.

மிகவும் நலிந்து போன நிலையில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள காந்தியின் காலணி மட்டும் 23 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை ஏலம் போகக்கூடும் என முல்லக் ஏல நிறுவனம் கூறியுள்ளது.

காந்தியின் இடுப்பில் எப்போதுமே காணப்படும் கடிகாரம், அவர் உணவு அருந்துவதற்கு பயன்படுத்திய குவளை மற்றும் தட்டு என்பன கடந்த 2009ஆம் ஆண்டு நியூயோர்க்கில் ஏலம் விடப்பட்டன.

இவற்றை பெயர் குறிப்பிட விரும்பாத இந்தியர் ஒருவர் 18 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு ஏலத்தில் வாங்கினார்.

காந்தியின் உடமைகள் வெளிநாட்டுகளில் ஏலம் விடப்படும் போதெல்லாம் இவ்வகை ஏலங்கள், பண ஆசையை வெறுத்து வாழ்ந்த மகாத்மாவின் பெயருக்கு களங்கம் கற்பிக்கும் விதமாக உள்ளன என, இந்தியர்கள் இவ் ஏலங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதோடு, காந்தியின் உடமைகளை தமது கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் அடையாளங்களாகவும் மதிக்கின்றனர். (செ-2)

# டி.எம்.சௌந்தராஜன் வைத்தியசாலையில்

திரைப்பட பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தராஜன் (வயது 91) உடல் நலக்குறைவால் வைத்திய சாலையின் தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக அவ்வப் போது வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் கடந்த வாரம் சென்னை மந்தைவெளியில் உள்ள அவரது வீட்டில் கீழே தவறி விழுந்துள்ளார். இதனால் தலையின் பின் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது. இதற்கான சிகிச்சை முடிந்து கடந்த இருநாட்களுக்கு முன்பு தான் வீடு திரும்பியிருந்தார்.



இதையடுத்து நேற்றுமுன்தினம் அவருக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டதால் மயிலாப்பூரில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவனவன் விதி அவனவன் கையில்
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஓய்வுபெற்ற நீதியரசரை முதன்மை வேட்பாளராக்க தயாரா?

உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாதிருக்க வேண்டும் என்று பாடிய இராமலிங்க வள்ளலாரை அறியாதவர்கள் இருக்க முடியாது. மிகச்சிறந்த மகான் அவர்.

ஒருநாள் பட்டபகல் வேளையில் கை விளக்கொன்றை வைத்துக்கொண்டு வீதியில் நீன்றார்.

பகல் பொழுதில் கை விளக்கு வெளிச்சம் எதற்கு?

வீதியால் சென்றவர்களில் சிலர், சுவாமி ஏன் இப்படி ... என்று கேட்டனர்.

அதற்கு, வள்ளலார் ; வீதியால் யாரேனும் மனிதர்கள் போகிறார்களா? எனப் பார்க்கிறேன் என்றார்.

நாட்டில் மனிதர்கள் வாழவேண்டும். அதிலும் குறிப்பாக ஆட்சியிலும், அதிகாரத்திலும், அரசியலிலும் மனிதம் இருக்கும் போதுதான் மக்கள் குறையேதுமின்றி நிறைவாக வாழ முடியும்.

இப்போதெல்லாம் வடபகுதியில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் பற்றிய பேச்சுக்களும் அதற்கான தயார்படுத்தல்களும் அறம்புறமாக நடந்து கொண்டிருக்கின்றன.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? என்று நோக்குகையில்,

வடக்கு மாகாண சபைக்கான முதன்மை வேட்பாளர் யார்? என்பதே முக்கிய கேள்வியாக இருக்கும்.

வடக்கு மாகாண சபைக்கான முதன்மை வேட்பாளராக அதாவது, தேர்தலில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றால், வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக யாரை நிறுத்துவதென்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய கடுமையான குழப்பமாகும்.

இந்தக் குழப்பத்திற்குத் தீர்வாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் யாரேனும் தங்கள் பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய தேவையில்லை.

மாறாக, இந்த நாட்டின் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்து ஓய்வுபெற்ற – சர்வதேச அங்கீகாரம் உடைய சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை முதன்மை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற கருத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முன்வைக்கப்பட்டது.

எனினும் இதுவிடயமாக சி.வி.விக்னேஸ்வரனுடன் உத்தியோகபூர்வமாக தொடர்பு கொண்டு முதன்மை வேட்பாளராக வாருங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேட்கவில்லை.

கூட்டமைப்பு கேட்கும் பட்சத்தில் விக்னேஸ்வரன் அவர்கள் தமிழர்களின் நிலை உணர்ந்து அதனை ஏற்றுக்கொள்வார்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ ஓய்வு பெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு அரசியலில் ஈடுபட விருப்பம் இல்லை என்பது போல காட்டாப்புக் காட்டுகிறது.

இதுதான் எங்கள் இனத்தின் சாபக்கேடு.

தகுதியானவர்களை – திறமையானவர்களை – நேர்மையானவர்களை – துணிந்து பேசவல்லவர்களை ஓரங்கட்டிவிட்டு, தமக் கும் தமக்கு இயைந்தவர்களுக்கும் பதவி கொடுத்து தமிழினத்தைப் பாழாக்கும் படுபாதகச் செயலை வேரறுக்காதவரை எங்களுக்கு நித்தமும் துன்பம் தான்.

# யுத்தத்தின் பின்னரும் தொடரும் தமிழின அழிப்பு

## சுரேஸ் எம்.பி. குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசத்தில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியிலும் தொடரும் இன அழிப்பு நடவடிக்கை தடுத்து நிறுத்தப்படவேண்டியதோடு தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேறவிடாமல் இராணுவத்தினர் ஊடாக இந்த அரசாங்கம் விரட்டியடிப்பது கூட தமிழின அழிப்பே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் அக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனமான இமை நிறுவனத்



தின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் ராஜா கீறீன் கவுஸில் வைத்து துவிச்சக்கர வண்டிகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மண்ணில் நாம் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். அதற்காக கல்விச் செயற்பாடுகளில் மாணவர்கள் முன்னேற்றம் காட்ட வேண்டும். அதேவேளை கலாசாரத்தையும் பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும். எதிர்காலத்தை சிறந்த முறையில் வடிவமைக்க வேண்டும்.

யுத்தத்திற்கு முன்பு எமது தமிழினம் கல்வி பண்பாடு கலாசாரம் என்பவற்றில் தலைசிறந்து விளங்கியது. ஆனால் தற்போது எல்லாவற்றையும் இழந்து விட்டு பிறரின் உதவிக்காக காத்திருக்கிறது.

மேலும் திட்டமிட்டு எமது பிரதேசத்தின் கலாசாரம், பண்பாடு அழிக்கப்பட்டு வருகிறது. தமிழினத்தின் இருப்பை அழிக்கும் நடவடிக்கையின் வெளிப்பாடே காணி சுவீகரிப்பாகும்.

காணிக்கு சொந்தக்காரன் நிலத்தையிழந்த நிலையில் பிச்சை எடுக்கிறான். இராணுவமோ அந்தக் காணியில் விவசாயம் செய்து தனது வருமானத்தை மக்களின் வயிற்றில் அடிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## வணிகப் பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு மகா வித்தியாலயத்தில் மீண்டும் க.பொ.த உயர்தர வணிகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள்,பெற்றோர்கள் விருப்பத்திற்கு அமைய வித்தியாலய அதிபர், ஆசிரியர்களின் விடாமுயற்சியின் காரணமாக தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸின் அனுமதியுடன் மீண்டும் வணிகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் சோ.குகநேசன் தலைமையில் தீவகக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரனிஸ்லாஸ் கடந்த 8-ம் திகதி வணிகப் பிரிவை ஆரம்பித்து வைத்தார் .

ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின் கீழ் இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டமை இப்பிரதேச மாணவர்கட்கு சிறந்த வரப்பிரசாதமாக அமையும் என நம்புகிறோம். (எ)

# பஸ்ஸுடன் மோதிய மோட்டார் சைக்கிள்

(கரணவாய்)

இ.போ.ச பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்து.யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் ஆவரங்கால் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவது, யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்து கொண்டிருந்த இ.போ.ச. பேருந்து, பயணிகளை ஏற்றுவதற்காக நின்றவேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் குறித்த பேருந்துடன் மோதியதிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கரணவாய் பகுதியை சேர்ந்த தேசியர் சுரேந்திரன்(வயது 30) என்ற நபரே இடது கால்முறிந்த நிலையில், சிகிச்சை பெற்று வருகிறார். (எ-3,60)

## தரம் 5 புலமைப் பரீட்சை திருத்தும் பணி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலய நிர்வாகத்திற்கு உட்பட்ட, தரம் 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி இன்று இடம்பெறமாட்டாதென வும்,

விடைத்தாள் திருத்தும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார். (ந)

## மகளிர் தினவிழா

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக சர்வதேச மகளிர் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் உளநல வைத்திய அதிகாரி திருமதி முல்லை பரமேஸ்வரன் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக யாழ் போரூட் நிறுவன திட்ட இணைப்பாளர் செல்வி. இராஜேஸ்வரி கார்த்திகேசு கலந்து சிறப்பிக்கவுள்ளார். (எ-3,60)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி காளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ திருவிழா இன்று மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

உற்சவத்தின் 6 ஆம் நாளான 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு வசந்த திருவிழாவும், 8 ஆம் நாளான திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு வேட்டைத்திருவிழாவும்,10 ஆம் நாளான 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறமும், மறுநாள் காலை தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணி தீர்த்தமும் இடம்பெறும். (எ-5)

## அதிபர்களுடன் ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர்களை இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (எ)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆன்மீகப் பயிற்சியின் பயன்



நாமே முதலில் ஆன்மீகப் பயிற்சியில் விளையும் நன்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் பிறர் வினாவுக்குத் தெளிவான பதிலளித்து மனநிறைவு பெறலாம். திருப்தியான பதிலை அனுபவபூர்வமாக,அறிவின் தெளிவோடு அளிக்க முடியவில்லையெனில் நமக்கு சோர்வு உண்டாகிவிடும். இத்தகைய சோர்வினால் பயிற்சியைக் கைவிட்டு பலர். இந்தக் குழப்பமும் நட்டமும் ஏற்படாதிருக்கவும் கேள்வி கேட்பேருக்கும் மனத் தெளிவோடும் உறுதியோடும் பதில் சொல்லவும் இங்கு ஆன்மீகப் பயிற்சியின் நல்விளைவுகளை விளக்கிக் கூறுகின்றேன்.

1. முறையான உடற்பயிற்சியினால் நோய் வராமல் காத்துக்கொள்ளுகின்றோம். உள்ள நோய்களும் காலத்தால் குணமாகின்றன. குறைந்தபட்சம் நோயின் கொடுமை குறைகிறது.

2. மனிதனின் உடலை விட முக்கியமான பொருள் உயிர். அது விஞ்ஞானக் கருவிக்கும் எட்டாதது. அவ்வளவு நுண்மையானது. இந்த உயிரை உணர்வாகப் பெறுகின்றோம். தீட்சையின் முதல் நாளன்றே உயிர்மேல் மனம் வைத்து ஒன்றி ஒன்றிப் பழகிவர, அறிவு நுண்மையும் கூர்மையும் பெறுகிறது. பயிற்சியால், அறிவு பெறும் உறுதி, நுட்பம், ஆற்றல் இவை வாழ்க்கைத் துறைகள் அனைத்திலும் வெற்றியடைச் செய்கிறது.

3. அகத்தாய்வுப் பயிற்சியினால் எண்ணத்தின் தன்மையும் தன் முனைப்பால் அறிவு திசைமாறி பேராசை, சினம், கடும்பற்று, வஞ்சம் , முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை ஆகிய ஆறு குணங்களாக அவ்வப்போது மாறுவதும் அந்த உயர்ச்சி வயப்பட்ட குணங்களின் வழியே செயல்புரிய அவற்றால் தனக்கும் பிறர்க்கும் ஏற்படும் தீய விளைவுகளைக் கண்டு பிடிக்கவும் முடிகிறது. அடுத்துப் பயிலும் ஆசைச்சீரமைப்பு, சினம் தவித்தல் கவலையொழித்தல் ஆகிய பயிற்சிகள் முறையாகப்பழகும் போது மனிதன் மனிதத் தன்மையோடு அமைதியும், இன்பமும் காத்து வாழ முடிகிறது.

– அருள் தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோண்டாவில் வடக்கு ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்கள் நடத்திய அன்னையர் தினவிழா கோண்டாவில் பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இராணுவத்தின் மூலமே மக்கள் பாதுகாப்பை பெற முடியும்

## கே.பி. கூறுகிறார்

(கொழும்பு)

கடந்த கால யுத்தத்தால் பின்னடைவு கண்ட பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் மூலம் மக்கள் உண்மையான பாதுகாப்பைப் பெற முடியும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் வெளியுறவு பொறுப்பாளர் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

குறித்த தகவலை கிளிநொச்சியில் உள்ள செஞ்சோலை சிறுவர் காப்பக நிலையத்தில் உள்ள தனது காரியாலயத்தில் வைத்து செய்தி பிரிவொன்றிற்கு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

"கல்வி அறிவின் முக்கியத்துவம் தற்போது தான் எனக்கு நன்கு புரிகிறது. இந்தக் கருத்திற்கு அமைய நான் முன்னர் செயற்பட்டிருந்தால் எனது நிலைமை நன்கு மேம்பட்டிருக்கும். யுத்தம் காரணமாக பாதிப்படைந்த நிலையில் இந்த நிலையத்தில் உள்ள சிறார்களின் கல்விக்கு நான் முக்கியத்துவம் அளிக்க தீர்மானித்துள்ளேன். வெளிநாட்டு புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி உதவியில் இயங்கும் இந்த செஞ்சோலை சிறுவர் காப்பகத்தில் தற்போது 60 பேர் தங்கியுள்ளனர்.

அரசியல் காரணங்களுக்காக யுத்தத்தால் பாதிப்படைந்த சிறார்களின் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய செயற்பாடுகளை சம்பந்தப்பட்டவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# கிளிமஞ்சாரோ சிகரத்தில் ஏறி அபுதாபி மாணவர்கள் சாதனை

கிளிமஞ்சாரோ சிகரத்தில் ஏறி அபுதாபி கல்லூரி மாணவிகள் சாதனை படைத்துள்ளனர். இந்த சிகரத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில் உள்ள கலீபா பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த 9 மாணவிகளும் 3 ஆசிரியைகளும் ஏறி சாதனை படைத்துள்ளனர். கிளிமஞ்சாரோ சிகரத்தில் மைனஸ் 10 முதல் 20 டிகிரி வரை குளிர் நிலவும் . இந்த நடுங்கும் குளிரிலும் சிகரத்தில் 6 நாட்கள் தொடர்ந்து ஏறி இவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

பெண் கல்விக்கு நிதி திரட்டுவதே இந்த பயணத்தின் நோக்கம் என்று இந்தக் குழுவினர் தெரிவித்தனர். இந்தப் பயணத்தின் மூலம் இந்திய மதிப்பில் 6 இலட்சம் ரூபா நிதி திரட்டியுள்ளனர். ஐக்கிய அரபு எமிரேட்சை சேர்ந்த ஒரு குழு கிளிமஞ்சாரோ சிகரத்தில் ஏறி இருப்பது இதுவே முதன் முறையாகும். இந்த சாதனைப் பயணத்தை வெற்றிகரமாக முடித்து விட்டு இக்குழு அபுதாபி திரும்பியுள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடான டான்சானியாவில் உள்ளது கிளிமஞ்சாரோ சிகரம் இதன் உயரம் 5 ஆயிரத்து 895 மீற்றர் ஆகும் .கிளிமஞ்சாரோ ஆபிரிக்கா கண்டத்தின் மிக உயரமான சிகரமாகும். உலக அளவில் இது நான்காவது உயரமான சிகரம். (அ-2)

# மாவோவின் நிழற்படம் 30 இலட்சத்திற்கு ஏலம்



சீன தலைவர் மாவோவின் அரிய நிழற்படம் 30 இலட்சம் ரூபாவிற்கு ஏலம் விடப்பட்டுள்ளது. சீனாவின் மாபெரும் தலைவர் மாவோ சேதுங் சீன கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர். இவர் காலமாகி 27 ஆண்டுகள் கடந்த நிலையில் இவரது அரிய படம் ஒன்று சீனாவில் நேற்று முன்தினம் ஏலத்துக்கு விடப்பட்டது.

அதனைப் பலர் போட்டி போட்டு கூடுதல் தொகைக்கு கேட்டனர். முடிவில் 30 இலட்சத்துக்கு அந்த படம் ஏலம் போனது. இது நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட 10 மடங்கு அதிகமாகும். அதனை லூஷான் மவுன்டெய்ன் என்ற சுற்றுலா நிறுவனம் ஏலத்தில் பெற்றுள்ளது. (அ-2)

# முபாரக் மீதான விசாரணை ஜூன் மாதத்திற்கு ஒத்திவைப்பு

(கெய்ரோ)

எகிப்து முன்னாள் ஜனாதிபதி முபாரக் மீதான மறு விசாரணை ஜூன் 8 ஆம் திகதிக்கு கெய்ரோ குற்றவியல் நீதிமன்றில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக். இவரது சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

கலவரத்தை அடக்க இராணுவம் மற்றும் பொலிஸார் பயன்படுத்தப்பட்டனர். அப்போது சுமார் ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். மேலும் பல ஊழல் வழக்குகளும் முபாரக் மீது தொடரப்பட்டிருந்தன.

இந்த நிலையில் பதவி விலகிய முபாரக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மீது நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.




அதில் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அதை எதிர்த்து முபாரக் மேன் முறையீடு செய்தார். எனவே, இந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதை விசாரித்த நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்ட முபாரக்கை பொதுமக்களை கொன்ற வழக்கிலிருந்து விடுதலை செய்தார். ஆனால், அவர் சிறையில் இருந்து வெளியேற்றப்படவில்லை. ஏனைய ஊழல் வழக்குகளின் விசாரணைகள் நடைபெற்று வருவதால் அவர் தொடர்ந்து சிறையில் உள்ளார்.

இந்நிலையில் முபாரக் மீதான வழக்கின் மறு விசாரணை நேற்று முன்தினம் கெய்ரோ குற்றவியல் நீதிமன்றில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி மஹ்மூத் கமேல்-அல்-ரஷீதி அடுத்த விசாரணையை ஜூன் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ-2)

# சுரங்கத்தில் வெடி விபத்து; 22 பணியாளர்கள் மரணம்

## *சீனாவில் துயரம்*



(பீஜிங்)

சீனாவின் தென் மேற்கு பகுதியில் உள்ள சுரங்கத்தில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டது இதில் 22 தொழிலாளிகள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிச்சுவான் மாகாணம் ஜின்ஜீவா பகுதியில் உள்ள தவோஸிகா என்ற சுரங்க விபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் திடீரென வெடி பொருள் ஒன்று வெடித்து சிதறியது. அப்போது 108 தொழிலாளிகள் பணியில் இருந்தனர். வெடி பொருள் வெடித்ததும் சுரங்கத்துக்குள் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் தொழிலாளிகள் சிக்கி கொண்டனர். தகவல் அறிந்து மீட்பு படையினர் விரைந்து சென்று சுரங்கத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால், 22 தொழிலாளிகள் மண்ணில் புதைந்தும் தீயில் கருகியும் இறந்திருந்தனர்.

உயிரிழப்பு எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருந்திருக்கும் சுரங்க நிர்வாகம் உண்மையை மறைக்கிறது என்று மனித உரிமை அமைப்புக்கள் புகார் தெரிவித்துள்ளன. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

ஆனால், சுரங்கத்தின் பாதுகாப்பு மோசமாக உள்ளதாக தொடர்ந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. தொழிலாளிகளுக்கு கடுமையான வேலை, அதிகாரிகள் அலட்சியம், ஊழல் விதிமுறைகளை பின்பற்றாமல் சட்டவிரோதமாக செயற்படுவது போன்ற காரணங்களால் சீன சுரங்கங்களில் அடிக்கடி இத்தகைய விபத்துக்கள் ஏற்படுகின்றன. (அ-2)

# சவுதியில் இலங்கை பெண் மரணம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் இலங்கையைச் சேர்ந்த பணிப் பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார். மதீனா நகரில் இடம்பெற்ற வாகன விபத்திலேயே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் ஹிதாயத் நகரைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

திருமண வைபவமொன்றிற்கு கடந்த வியாழக்கிழமை சென்றுகொண்டிருந்த போதே குறித்த வாகன விபத்து இடம்பெற்றதென்று தங்களுக்கு அறிவிக்கப்பட்டதாக விபத்தில் மரணமடைந்தவரின் சகோதரி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த வாகன விபத்தில் ஏறாவூரைச் சேர்ந்த பெண் உட்பட வீட்டு எஜமானியும் அவரது 3 குழந்தைகளும் மரணமடைந்துள்ளனர் எனவும் தெரிய வருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெங்களூருக்கு எதிரான போட்டி

# கொல்கத்தா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

ஐ.பி.எல். கிரிக்கெட் 60வது லீக் போட்டி ராஞ்சியில் நேற்று மாலை நடைபெற்ற போட்டியில் பெங்களூர்-கொல்கத்தா அணிகள மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதை அடுத்து பெங்களூர் துடுப்பாட்டம் செய்ய ஆரம்பித்தது.

பெங்களூர் அணியில் தொடக்க வீரர்களாக புஜாரா மற்றும் கெய்ல் களம் இறங்கினார்கள். புஜாரா 5 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். அடுத்து கெய்ல் உடன் ஜோடி சேர கோலி களம் இறங்கினார்.

இருவரும் நிதானமாக விளையாட தொடங்கினர். கோலி 17 ஓட்டங்களில் கல்லிஸ் பந்தில் போல்ட் ஆனார்.

அடுத்து டி வில்லர்ஸ் களம் இறங்கினார். கெய்ல் 33 ஓட்டங்களிலும் வில்லியர்ஸ் 28 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். கொல்கத்தா அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் பெங்களூர் அணி திணறியது.

அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். இறுதியில் பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 115 ரன்கள் மட்டுமே எடுத்தது.

கொல்கத்தா தரப்பில் நரைன் அதிக பட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

116 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களம் இறங்கியது.

தொடக்க ஆட்டக்காரராக களம் இறங்கிய பிஸ்லா ஆட்டத்தின் 2 வது பந்தில் அவுட் ஆனார். அவருடன் களம் இறங்கிய கம்பீர் 14 ரன்னில் ஆட்டம் இழந்தார்.

3வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த கல்லீஸ் மற்றும் பதான் நிதானமாக விளையாடினார்கள். பதான் 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இளந்தா'.

அடுத்து கலீஸ் உடன் ஜோடி சேர திவாரி களம் இறங்கினார். சிறப்பாக விளையாடி வந்த கலீஸ் 41 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். திவாரி 24 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

இறுதியில் கொல்கத்தா அணி 19.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 116 ரன்கள் எடுத்தது.

இதனால் கொல்கத்தா அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# வோட்சனின் அதிரடியால் சென்னை வீழ்ந்தது

ஐ.பி.எல். கிரிக்கெட் 61வது லீக் போட்டி ஜெய்ப்பூரில் நேற்றிரவு நடைபெற்றது.

இதில் சென்னை-ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. சென்னை அணியில் தொடக்க வீரர்களாக ஹசி மற்றும் விஜய் களம் இறங்கினர்.

இருவரும் சிறப்பான தொடக்கத்தை வெளிப்படுத்தினர். இந்த ஜோடியை பிரிக்க ராஜஸ்தான் அணி மிகவும் போராடியது. இருவரும் ஜோடி சேர்ந்து 83 ரன்கள் எடுத்தனர். ஹசி 40 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பின்னி பந்தில் போல்ட் ஆனார்.

பின்னர் வந்த ரெய்னா 1 ஓட்டங்களிலும அணித் தலைவர் தோனி 2 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். விஜய் சிறப்பாக விளையாடி 50 பந்தில் 55 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

5வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ஜடேஜா மற்றும் பிராவோ ஜோடி சேர்ந்து இறுதியில் அணியின் ஓட்டத்தினை உயத்தினர். ஜடேஜா 12 ஓட்டங்களிலும் பிராவோ 23 ஓட்டங்களிலும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

இறுதியில் சென்னை அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 141 ரன்கள் குவித்தது.

142 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணியில் டிராவிட் மற்றும் ரஹானே களம் இறங்கினார்கள்.

ரஹானே 9 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த பால்க்னர் 1 ஓட்டங்களிலும் சாம்சன் ஓட்டமேதும் பெறாமலும் அவுட் ஆனார்கள்.

அடுத்து டிராவிட் உடன் ஜோடி சேர வாட்சன் களம் இறங்கினார். 22 ரன்கள் எடுத்த நிலையில் டிராவிட் ஆட்டம் இழந்தார். அடுத்து பின்னி களம் இறங்கி வோட்சனுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

வோட்சன் 34 பந்துகளில் 6 சிக்ஸர் 6 பவுண்டரிகள் அடித்து 70 ஓட்டங்கள் குவித்தார். பின்னி 23 பந்துகளில் 3 சிக்ஸர் 2 பவுண்டரிகள் அடித்து 41 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில் ராஜஸ்தான் அணி 17.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்கள் குவித்து சென்னையை வீழ்த்தியது.

இந்த ஐ.பி.எல். சீசனில் ராஜஸ்தான் அணி தனது சொந்த மண்ணில் விளையாடி எந்த அணியிடமும் தோற்றது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜீவ் கொலைக் குற்ற ...

கேள்விகளுக்கு பதிலளித்துள்ளார்.

உங்கள் விடுதலைக்கான சாத்தியங்கள் எப்படி இருப்பதாக உணர்கிறீர்கள்.

கடந்த13ஆண்டுகளாக நிறைய மனுக்களை தமிழக முதல்வர்களுக்கு அனுப்பி விட்டோம் முன்னாள் முதல்வர் கருணாநிதி தன் கட்சியைச் சேர்ந்த ஆயுள் தண்டனைக் கைதிகள் இருவரை விடுதலைசெய்ய வேண்டும் என்பதற்காக கடந்த 2008ம் ஆண்டு தமிழகம் முழுவதும் ஏழு ஆண்டுகள் மட்டுமே தண்டனையை முடித்த ஆயிரத்து 405 கைதிகளை விடுதலை செய்தார்.

அப்போது நாங்கள 17 ஆண்டுகள் தண்டனையை நிறைவுசெய்திருந்தோம்.

ஆனால் சி.பி.ஐ.வழக்கு என்ற நொண்டிச் சாக்கு சொல்லி எங்கள் நால்வரை மட்டும் விடுதலை செய்யவில்லை

இப்போதைய முதல்வரைப் பொறுத்தவரையில் அதிகாரிகள அந்த மனுக்களை முதல்வரின் பார்வைக்கே கொண்டு செல்வது இல்லை.

எங்கள் நால்வரின் விடுதலை இப்போதைய முதல்வர் ஜெயலலிதா அவர்களின் கையில் தான் இருக்கிறது கருணாநிதியை நாங்கள் நம்புவதாக இல்லை .

சாந்தன்,முருகன்,பேரறிவாளன் மூவரின் தூக்குத் தண்டனையை ரத்துசெய்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்று இப்போது கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளாரே?

முதல்வர் ஜெயலலிதா தன அமைச்சரவையைக் கூட்டி அப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அறிவுறுத்தி கருணாநிதி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

கடந்த 2011 ம் ஆண்டு ப.சிதம்பரம் உள்துறை அமைச்சராக இருந்தபோது மூன்று தமிழர்களைத தூக்கிலிடுவது என டெல்லி முடிவுசெய்தது அவர்கள் அளித்த கருணை மனுக்கள மீது கருத்துக் கேட்டு கருணாநிதி தலைமையிலான அரசுக்கு ஆவணங்களை அனுப்பிவைத்தது மத்திய அரசு.

ஆனால் அப்போது அமைச்சரவையைக் கூட்டி இதேபோன்ற தீர்மானத்தை ஏன அவர் நிறைவேற்றவில்லை?

இதே மூன்று தமிழர்களும் நளினியும் கடந்த 2000,2001ம் ஆண்டுகளில் அப்போது ஆட்சியில் இருந்த கரு ணாநிதியிடம் கருணை மனு அளித்தனர் சட்டப்படி அமைச்சரவைய்யைக் கூட்டி முடிவெடுக்காமல் நேரடியாக கவர்னருக்கு அனுப்பினார் கருணாநிதி.

கவர்னரோ நால்வரின் கருணை மனுக்களையும் நிராகரித்து தூக்குத் தண்டனையை உறுதிசெய்தார். இதை எதிர்த்து நால்வரும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

அமைச்ரவையின் ஆலோசனைப் படிதான் கவர்னர் முடிவெடுக்க வேணடும் என்று தீர்ப்பு கூறிய நீதிமன்றம் கருணை மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்யும் படி கவர்னருக்கு உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவுக்குப் பின் வேறு வழியின்றி கருணாநிதிதன் அமைச்சரவையைக் கூட்டி நளினியின் தூக்குத் தண்டனையை மட்டும் ரத்துசெய்தார்.அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்று கவர்னரும் அப்படியே ஆணை பிறப்பித்தார்.

அதிகாரத்தில் இருக்கும்போது மூன்று தமிழர்களுக்கு ஆதரவாக முடிவெடுக்காத கருணாநிதி இப்போது இப்படி கோரிக்கை வைப்பதன் நோக்கம் அவர்கள் மீதான அக்கறையில் அல்ல தான் வாய் திறந்தால் ஜெயலலிதா எதிர் மறையாகத்தான்செய்வார் என்ற கெடு எண்ணத்தில்தான்.

அதனால் அவர் வாய் திறக்காமல் இருந்தாலே போதும் அந்த மூன்று தமிழர்க ளுக்கு மட்டுமின்றி எங்கள் நால்வருக்கும் நல்லது நடக்க வாய்ப்பு இருக்கிறது என்னாம். (எ-8)

Direct Marketing International Pvt (Ltd)

வேலைவாய்ப்பு

(Management Trainees -2013)

25 People Needed Imediatly

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கும் அதன் வட மாகாண கிளைகளுக்கு(யாழ்ப்பாணம்,வவுனியா,கிளிநொச்சி,முல்லைத்தீவு, மன்னார்) ஆகிய பிரதேசங் களிலிருந்து O/L , A/L படித்தவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

- Trainee Marketing Executive,
- Sales Representatives.
- Innvontary Customer Service.

பயிற்சியின்போது fixed income Package ஆக 12,000–15,000 பெறலாம்.

குறிப்பு: தங்குமிட வசதிகள் உண்டு; வயதெல்லை: 18-35

தொடர்புகளுக்கு: 0771363797, 0217200867, 0755049038

(C-3295)

## திராய்மடு ...

பிரிவுக்கு வழங்கிய தகவலையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி என்.எம்.றஹீம் தலைமையிலான பொலிஸார் குறித்த சட்ட விரோத ஆயுதங்களை கைப்பற்றி அதனை மீட்டுள்ளனர்.

சட்ட விரோதமாக கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் தற்போது மட்டக்களப்பு மாவட்ட தலைமையக பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் இதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிவித்த மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி என்.எம்.றஹீம் சுவிஸ் கிராமம் எப்.வலய காட்டுப் பகுதியில் இருந்த ஒருவர் இந்த சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருந்திருக்கலாம் எனவும் பொலிசாரின் பரிசோதனையின் பயத்தால் மறைத்து வைத்திருக்கலாம் எனவும் சந்தேகிப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.(எ-8)

## அசாத் சாலி ...

சாலி அது தொடர்பில் ஜூனியர் விகடனுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தார். இக்கடிதத்தையும் ஜூனியர் விகடன் பிரசுரித்திருந்தது.

இந்நிலையில், தமிழகத்திலுள்ள தமிழ்க் குழு ஒன்றுடன் இணைந்து இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்களை ஆயுதப் போராட்டத்துக்கு அணிதிரட்ட அசால் சாலி முயன்றதாலேயே, அவர் கைது செய்யப்பட்டதாக சிறிலங்காவின் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச புதுத் தகவலை வெளியிட்டிருந்தார்.

சிறிலங்கா பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, கடந்த எட்டு நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான அசாத் சாலி நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (எ-8)

## சவுதியில் தங்கி ...

6 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெயர்ந்து அல்லது சட்டவிரோதமாக தங்கியிருக்கும் அனைத்து வெளிநாட்டவர்களையும் எதிர் வரும் ஜூலை மாதம் முதல் வாரத்திற்கு முன்னர் நாட்டில் இருந்து வெளியேறுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையர்களுக்கும் தங்களது தொழில் தருநரின் தலையீடுகள் எதுவுமின்றி சவூதி அரேபியாவில் இருந்து வெளியேறுவதற்குசந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக தூதரகத்தின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிற்குத் திரும்புவதற்கான விமானப் பயணச் சீட்டுக்களை தூதரகத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அருகிலுள்ள தூதரகம் அல்லது கொன்சூலர் அலுவலகத்தின் ஊடாக தற்காலிக அனுமதி அட்டையைப் பெற்றுக்கொண்ட பின்னர் தாய் நாட்டிற்கு திரும்ப முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கால அவகாசம் ஜூலை மாதம் முதல் வாரம் வரை மட்டுமே காணப்படுவதாகவும் அதன் பின்னர் சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் அனைத்து வெளிநாட்டவர்களும் தண்டனை விதிக்க சவுதி அரேபிய அரசு தீர்மானித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-8)

## துப்பாக்கி ...

பூணாகலை வீதியில் கடமையில் இருந்த பொலிஸார் அங்கு பயணித்த கப் வாகனமொன்றை நிறுத்தியுள்ளனர்.

எனினும் பொலிஸாரின் சமிக்ஞையை மதிக்காது அவ் வாகனம் சென்றதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வாகனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதில் இருந்த ஆவணங்களை வைத்து சந்தேகநபரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர். (எ-8)

## பாடசாலை ...

சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கழுத்தில் துணி சுற்றப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட பிரஸ்தாப மாணவனின் சடலம் நேற்றிரவு 8 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத மற்றும் மரண விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.பொலிஸார் மேலதிக விசாரணைகளாக மேற்கொண்டு வருகின்றனர். (எ-8,11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு ஒருபோதும் ...

பாடும் கிடையாது.

ஜெனிவாவில் இலங்கையைத் தனிமைப்படுத்தும் வகையில், இந்தியா வாக்களித்ததற்குக் காரணம், நாம் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை அமெரிக்கத் தீர்மானம் கொண்டு வரும் என்ற நம்பிக்கை தான்.

அரசியல் தீர்வு விடயத்தில், இந்தியா விரும்புவதை நிறைவேற்றும்படி இலங்கைக்கு உத்தரவிடாது.

. உள்ளக நடைமுறைகளின் மூலம் இலங்கை மக்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

ஆனால், உள்ளக பேச்சுக்கள் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக இருக்க வேண்டும்:

இந்தியா ஒருபோதும் இலங்கைக்கு ஆணையிடுகின்ற வகையில் செயற்படாது. அது எமது அணுகுமுறையல்ல." என்றும் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார். (எ-8)


Digital

விஷேட கட்டண சலுகைகள்

இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062



A/L கலை வர்த்தக மாணவர்களே!

யாழ்.நகரின் No1 கல்வி நிலையம் உங்கள் சுன்னாகம்–இணுவில் பகுதியில் ஆரம்பமாக உள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்

(சீ-3325)


## 19-வது திருத்த ...

நாட்டின் நீதித்துறை அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூஃப் ஹக்கிம, 19 ஆவது திருத்தச் சட்டத்தை முன்மொழிந்தாலும் அதை தமது கட்சி எதிர்க்கும் எனவும் ஹஸன் அலி சுட்டிக்காட்டுகிறார்.

(மற்றொரு செய்தி உள்ளே) (எ-8)


**காது கேட்கும் சாதனம் தவறிவிட்டது**

கொக்லெயர் இம்பிளான்ற் (COCHLEAR IMPLANT) காதுகேட்கும்சாதனம் 11.05.2013 அன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இ.போ.ச பஸ்ஸில் முருகண்டிக்கும் பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது. இச்சாதனம் சத்திரசிகிச்சைக்கு உட்பட்டவர் மாத்திரமே பயன்படுத்தக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.: 077 316 996, 021 222 6738, 021 222 7974 (2606)

**மணல் மண் வேண்டுமா ?**

- கட்டவேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
- இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
- உங்கள் இடத்துக்கே கொண்டு வருகின்றோம்.

4 1/2 டிரக்டர் 20,500/=

தொடர்பு:- ராம் 072 637 8546

**மணல் மண் விற்பனைக்கு**

கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் உகந்த உப்புத் தன்மையற்ற மணல் மண் விற்பனைக்குண்டு.

உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தருகிறோம்.

தொடர்பு:- ஜீவா 071 368 4639



தில்லையம்பதியாள் துணை



சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

**அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்**

முப்பத்து எட்டாவது ஆண்டு

**வைகாசி மஹோற்ஷவ பெருவிழா– 2013**

(இன்று கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பம்)

13.05.2013 திங்கள் முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம்
15.05.2013 புதன் மாலை 7.00 மணிக்கு அன்னச்சப்பறம்
17.05.2013 வெள்ளி மாலை 7.00 மணிக்கு பூச்சப்பறம்
18.05.2013 சனி மாலை 7.00 மணிக்கு வசந்தோற்சவம்
19.05.2013 ஞாயிறு மாலை 7.00 மணிக்கு கைலாசவாகனம்
(மாலை 6.45 மணிக்கு கைலாசவாகனம் வெள்ளோட்டம்)
22.05.2013 புதன் பிற்பகல் 2.00மணி வேட்டைத்திருவிழா
(ஸ்ரீ ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெறும்)
மாலை 7.00மணிக்கு சப்பறத்திவிழா
23.05.2013 வியாழன் முற்பகல் 10.00மணிக்கு இரத உற்சவம்
(நண்பகல் 12.00மணிக்கு புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு)
24.05.2013 வெள்ளி நண்பகல் 12.30மணிக்கு பூரணை தீர்த்த உற்சவம் மாலை 6.00 மணிக்கு கொடியிறக்கம்
25.05.2013 சனி முற்பகல் 11.00 மணிக்கு விசேட அபிஷேகம் மாலை 7.00 மணிக்கு பூங்காவனம்
26.05.2013 ஞாயிறு காலை 6.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் மாலை 7.00 மணிக்கு வைரவர் மடை

**தினசரி உற்சவம்**

காலை :- .8.00 மணிக்கு அபிஷேகம் விசேடபூஜை
10.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11.30 மணிக்கு அம்பாள் வீதி உலா வரும் காட்சி

மாலை :- 4.30 மணிக்கு சாயரட்சைப்பூஜை
6.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
7.00 மணிக்கு அம்பாள் வீதி உலா வரும் காட்சி

மஹோற்சவ பிரதம குரு

சிவஸ்ரீ குமார சரவணபவ குருக்கள் ( J.P. இணுவில்)

மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மகேஸ்வர பூஜை அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கும் வைபவமும் இடம்பெறும்

தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்

தில்லையம்பதி திருக்கோயில் பரிபாலன சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.